
# வேர்கள் வான் நோக்கின்...




வட்டக்கச்சி வினோத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேர்கள்
# வான் நோக்கின்...



வட்டக்கச்சி வினோத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் விபரம் :**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வேர்கள் வான் நோக்கின்... |
| நூலின் வகை | : | கவிதை |
| நூலாசிரியர் | : | வட்டக்கச்சி வினோத் |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | : | 2023 |
| பிரதிகள் | : | 500 |
| பக்கங்கள் | : | viii + 80 |
| அச்சுப்பதிப்பு | : | கலைமகள் அச்சகம்,<br>வவுனியா.<br>தொ.பே : 076-9197447 |
| கணினி வடிவமைப்பு | : | திரு.க.முரளிதரன் |
| விலை | : | 300.00 |
| ISBN | : | 978-624-99411-0-6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
:021 2280024 021 2221595,
:021 2280024 021 2221595.
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District,
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
:021 2280024 021 2221595,
:021 2280024 021 2221595.
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

## சமூக அக்கறையுடனான
## கலை, இலக்கியப்பணி தொடரட்டும்!!!

மனித வாழ்வியல் சக்கரத்தின் அசைவுகளை மீட்கும் காலக்கண்ணாடிகளான படைப்பிலக்கியங்களுள் கவிதை வடிவத்திற்கு தனித்துவமான இடமுண்டு. கலைத்துவமும், கவித்துவமும் நிரம்பித் ததும்பும் கிளிநொச்சி மாவட்டத்தின் பண்பாடு, கலை, இலக்கிய மரபுகளுக்கு காலம்காலமாய் கரங்கொடுத்துவரும் வட்டக்கச்சி மண்ணைத் தன் பூர்வீகமாகக் கொண்டு, தனது மண்ணையும், மக்களையும் அவர்களது மரபியல்களையும் நேசிக்கின்ற ஒரு சமூக சிந்தனையாளராக இளங்கவிஞர் வட்டக்கச்சி வினோத் அவர்கள் ஆற்றிவருகின்ற தமிழ், இலக்கியப்பணி அளப்பரியது.

தன் ஊரின் பெயரையே தனக்குரித்தான அடையாளமாக வரித்துக்கொண்ட வினோத், அதன் வெளிப்பாடாகவே தனது படைப்புக்களையும் வெளிக்கொண்டு வருகிறார். துடிப்புள்ள இளங்கவிஞரான இவர் தனது படைப்புக்களை நூலுருவாக்கி 'காலநதி' என்னும் முதலாவது கவி நூலுக்கு அடுத்தபடியாக, தனது இரண்டாவது கவி நூலைப் பிரசவிப்பதையிட்டு அதே ஊரைச் சேர்ந்தவன் என்ற வகையிலும், அவரையும் அவரது கலை, இலக்கிய ஆர்வத்தை அறிந்தவன் என்ற வகையிலும் நான் பெருமிதம் அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் தந்த இழப்புக்களாலும் வலிகளாலும் ஏற்பட்ட ஆற்றமுடியாத மனக்காயங்களாலும், அந்நிய கலாசார மோகத்தினாலும், நவீன பொழுதுபோக்கு சாதனங்களாலும் அருகிவரும் நம் பண்பாடு, கலாசார மரபியல்களைத் தன் வயதொத்த இளம் சந்ததிக்கு எடுத்துரைக்கின்ற ஓர் படைப்பாளியாக, தமிழ்த் தேசியத்தின் வழி, தடம் மாறாது பயணிக்கும் ஓர் இனப்பற்றாளனாக தன்னை அடையாளப்படுத்தியிருக்கிற 'வட்டக்கச்சி வினோத்' போன்ற சிந்தனாவாதிகளே எமது மண்ணினதும், இனத்தினதும் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஏதுக்கள்.

இன, மொழி, சமூகப் பற்று என்பவை மிகுந்திருக்கும் இளங்கவிஞர் வினோத், இதுநாள் வரையிலும் தான் நேரிடையாகக் கண்டு, அனுபவித்து, வாழ்ந்த வாழ்வையும், வாழ்க்கை நிகழ்வுகளையும், சமூகப் போக்கையும் சீர்திருத்தத்தையும் யதார்த்தமான கவிதைகளாகத் தொகுத்து, அதற்கு நூல் வடிவம் கொடுத்திருப்பதும், அந்த நூலுக்கு நான் வாழ்த்துரை வழங்க கிடைத்தமையும் மனநிறைவளிக்கிறது.

இந்த மண்ணின் வலிகளையும், உணர்வுகளையும், மரபியல்களையும் தாங்கி வெளிவரும் இக்கவிதை நூலின் வெளியீடு சிறப்புறவும், இதழாசிரியர் வட்டக்கச்சி வினோத் அவர்களின் கலை, இலக்கியப்பணி தொடரவும், சமூகத்தை நேசிப்பவர்களையும், இலக்கிய ஆர்வலர்களையும் மகிழ்விக்கும் அவரது படைப்புக்கள் தொடர்ந்து வெளிவரவும் இறையாசிகளை இறைஞ்சி மனப்பூர்வமாக வாழ்த்தி நிற்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

வட்டக்கச்சி வினோத் என்னும் நாமத்தில் பட்டிதொட்டி எங்கும் நாகூக்காக கவிபடைக்கும் எங்கள் ஊரின் அன்புக்குரியவன். இவன் கவிவரிகளில் சாதிய ஒழிப்பு, பெண்விடுதலை, சமத்துவம், கல்வி, விளையாட்டு, இயற்கை நேசிப்பு, பக்திப்பரவசம், தேசவிடுதலை பரந்து விரிந்து காலத்தின் தேவை உணர்ந்து கவிபடைக்கும் பல்வகை ஆளுமை கொண்டவன்.

ஊரின் ஒற்றுமை இளைஞர்களின் பொழுதுபோக்கு சமூகப்பணி மற்றவர்களுக்கு உதவும் மனிதநேயம் எப்பணியானாலும் அப்பணியை தன் பணியாக தலைமேல் ஏற்று முடிக்கும் காரிய சித்தன்.

பல்சுவை கவிதைகளை காலத்தின் தேவை அறிந்து எழுதும் புதுயுகக் கவிஞன். இவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். வட்டக்கச்சி வினோத் தனது கவிதைகள் மூலம் ஈழத்தில் தலைசிறந்த கவிஞன் என்ற மகுடத்தை சூடிக்கொள்ள எல்லாம்வல்ல இறைவனின் ஆசிகளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**ச.பூலோகராஜா**
அதிபர்,
கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

கவிஞர் வட்டக்கச்சி வினோத்தின் கவிதை நூலுக்கு வாழ்த்து செய்தியொன்று வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். எங்கள் ஊரின் பெயரை தன் பெயருக்கு அடைமொழியாக கொண்டு கவிதை புனையும் ஆற்றல் கவிஞர் வினோத்திற்கு உரிய தனிச் சிறப்பாகும். மிகவும் இளம் வயதிலிருந்து கவிதை கைவரப் பெற்றவராக திகழ்ந்துவரும் வினோத் நாளும் கவியெழுதும் வல்லமை பெற்றவர் எங்கள் ஊரின் அழகை ஆலயங்களின் சிறப்பை விளையாட்டின் மேன்மையை இளமையை முழுமையை அழகை வறுமையை ஏழ்மையை இயலாமையை மழையை முகிலை வானத்தை பூமியை வாய்க்காலை வயலை வரம்பை வெற்றியை தோல்வியை நிலையாமையை வீரத்தை சோகத்தை கவி வரிகளில் எழுதாத விடயங்கள் இல்லை எனலாம்.

நாளும் கவி எழுதுவதால் தினமும் மகிழ்ந்திருக்கும் ஆற்றலும் இயல்பும் வாய்க்கப் பெற்றவராக வினோத் விளங்குகிறார் இந்த மகிழ்ச்சியையும் எழுச்சியையும் அவரை நிறைவின் உச்சத்தில் வைத்திருப்பதை உணரமுடியும் வினோத்தின் அழகிய அர்த்தமுள்ள கவிவரிகள் இந்தியாவின் புகழ்பெற்ற பாடகி அனுராதா சிறிராமினால் பாடலாக பாடப்பெற்றது இவரின் திறமைக்கு மகுடம் வைத்த சிறப்பாகும்.

எங்கள் ஊரில் உலாவரும் இந்த பாரதிக்கு இப்போது இளமை வயது இன்னும் இன்னும் தமிழைப் போற்றும் பணியை அவர் செய்ய வேண்டும் அதனால் எங்கள் மொழியும் இனமும் எழுச்சி பெற வேண்டும் தொடர்ந்து அவர் எழுதிக்கொண்டிருக்க வேண்டும் அவையும் நூலுருப்பெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**அ.பங்கையற்செல்வன்**
அதிபர், கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்,
வட்டக்கச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

நாம் வாழும் காலத்து சமூகத்தில் உள்ள பிறழ்வுகளைக் கண்டு என் வலிமைக்கு ஏற்றதுபோல வரிகளைத் தொடுத்துள்ளேன். உணர்வுகளை வெளிப்படுத்தும் நோக்கில் எனக்குள் உருவான இந்த கவிதைத் துளிகளை படைப்புகளாக உருவாக்கும் முயற்சியில் காலநதிப் பயணத்தில் இப்படைப்பும் இணைகின்றது.

படைப்புகளை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் எளிமையாகவே படைக்கவேண்டும் என நினைக்கிறேன்.

போட்டிகளுக்கு எழுதுவதைத் தாண்டி என்போக்கில் எழுதும்போது, எனக்கான தனித்துவத்தையும் எம் தேசத்தின் பாடுகளையும் வெளிக்கொண்டுவர முடியுமென்பது நம்பிக்கை.

என் கவிதைகள், இதயத்தில் கனதியாக எரிந்து கொண்டிருக்கும் தாகத்தின் வெளிப்பாடாகவே இருக்கும். எனக்குள் ஏற்பட்ட உந்துதல் வாசகர் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனில் அதுவே இப்படைப்பின் கனதியைப் பறைசாற்றும்.

எம் மண்ணின் உரிமைக்காக குரல்கொடுக்கும் எம் தேசத்தின் போர்களத்தில் என் வரிகளும் ஏதோ ஒரு வடிவில் ஒலிக்கும். தொடர்ந்தும் எனது "உயிர்மை" சிந்த உங்கள் ஆதரவு இருக்கும் என நம்புகிறேன்.

இப் படைப்புக்கு ஆதரவாக இருந்த குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் என்சக படைப்பாளிகள் அனைவருக்கும் நன்றியை வெளிப்படுத்துகின்றேன்.

**வட்டக்கச்சி வினோத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

போதையற்ற

எம் தேசத்தின்

எதிர்காலத்துக்காக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமம் தந்த ரம்மியம்...

குடிசையின் முன்னால் திண்ணை
வரிசையில் நின்ற தென்னை
வருடி வரும் காற்றிடை
குறுகியபடி குட்டித் தூக்கம்

மலரும் அந்த நினைவை
மீட்டிப் பார்க்கும் மனது
நீர் தெளித்த முற்றம்
பாட்டி போட்ட கோலம்
எறும்புகள் ஆர்ப்பாட்டம்
நாள்தோறும் நடந்தேறும்

சட்டியில் பிடி சோறு
வட்டமாய் கூடி இருந்து
பச்சைமிளகாய் மெல்லக் கடித்து
பாசமாய் புசித்த நினைவு
ஊட்டமாய் நிறைந்து கிடக்கு

வேயப்பட்ட கிடுகு வரிசையும்
மண் சுவற்றின் பாதுகாப்பும்
குப்பிவிளக்கும் தரும் ஒளியும்
மழைகால பாத்திர இசையும்
வெய்யில் பாச்சும் ஒளிக்கீற்றும்
என்றும் மனதோடு இருக்கும்
கிராமம் தந்த ரம்மியம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கையாக வரும் பசி

முறித்த முருங்கைக் கீரை
அறுத்த அகத்தி இலை
வறுக்க கொஞ்ச நெய்
நறுக்கி போட்ட மிளகாய்
வெடித்துச் சிதறும் கடுகு
மணக்கும் நறுமணம் பாரு
விருந்தே மருந்தாகும் கேளு
அரைத்து வைத்த மீன்குழம்பு
நெய்யில் அவிந்த பருப்பு
பொரித்த வடகத்தின் கசப்பு
உணவாகும் வீட்டில்
நோய்க்கு விடுப்பு

முற்றத்து பசளி
முற்றாத வெண்டி
முற்றிய பூசணி
குற்றிய பச்சை அரிசி
குறையாமல் உணவாக
நோய் விலகும் தானாக

நஞ்சு விசிறாத காய்கறி
செயற்கை சேராத ருசி
இயற்கையாக வரும் பசி
இதுவே வாழ்வியல் நெறி
நோயற்ற வாழ்வே மகிழ்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதனால் நீ காப்பியம்

அன்பில் அகம்
கோபத்தில் புறம்
வாழ்வில் அறம்
நீ ஒரு தமிழ்ச்சங்கம்
பேச்சில் கவிதை
நடையில் நாடகம்
சிரிப்பில் இசை
உண்மையில் நீ முத்தமிழ்
நீ பெண்பால்
என் அன்பால்
இணைந்த காதலின்பால்
காண்போம் வள்ளுவத்தின் மூன்றாம்பால்
ஆதலால் நீ திருக்குறள்

நீ வளையாபதி
என் வாலிபத்தின் அதிபதி
நீ மணிமேகலை
என்றும் என் மனக்கவலை
நீ குண்டலகேசி
நித்தம் என்னை நேசி
நீ சிலப்பதிகாரம்
காட்டு என்மீது அன்பின் அதிகாரம்
நீ சிந்தாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பற்றி சிந்திப்பாய்
அம்மணி...
அதனால் நீ காப்பியம்
ஆகுமா நம் காதல் காவியம்.

## இரவு

இரவின் நிசப்தத்தை
இரைச்சலில் நிராகரிக்கின்றன
வண்டுகள்

காற்றின் அமைதியை
காரணமின்றி தீண்டிப்பார்க்கிறது
காய்ந்துபோன இலைகள்

நட்சத்திர கூட்டத்திடம்
இருட்டை கடன்கேட்கின்றன
மின்மினிப் பூச்சிகள்

பக்கத்து வீட்டுப்பாட்டி
தனிமையை தெளிவு படுத்தியது
தொடரும் இருமல்

அடுப்பை கிளறும் பூனை
தெளிவாக தெரிகிறது
வீட்டின் வறுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளே நீ இங்கு வாழ்வது கடினம்

வாசல் கதவுகளை திறந்து
வாகைக் காற்றை அனுமதித்து
வாழ்க்கை சோகத்தை ஒப்பிக்க காத்திருந்து
பார்த்திருந்தேன்...

வசதியில்ல வீட்டிலும் வந்து போனது
வடிவாக தத்துவம் தந்து போனது
சமத்துவத்தை என் மனதில் தொட்டுப் போனது
தான் சந்தித்த கதைகளையும் சொல்லிப்போனது

சோமாலிய பிள்ளைக்கு உணவில்லையாம்
என் நாடும் அயல் நாடும்
சோம பாணத்தில் தள்ளாடுதாம்
கறுப்பு உறவுகள் பசியில் மடியுதாம்
விஞ்ஞானம் செவ்வாயில் நீர் தேடுதாம்
உலகம் மனிதம் என்பதை மறந்து போனதாம்
உயிருக்கு மதிப்பு குறைந்து போனதாம்.

புதுப்புது நோயும் பரவுதாம்
பரப்பியவன் வருவாய் மருந்தாகுதாம்
உறவுகளின் சந்திப்பு தொலைபேசியிலாம்
உறக்கத்தில் அதுதான் பக்கதிலாபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடல் கதைகள் பல உள்ளதாம்
உணர்ந்து திருந்துவோர் சிலர்தானாம்

உலகில் உளத்தின் நோய்கள் அதிகம்
உடலில் நோயாய் வெளித் தெரியும்
மருத்துவம் அதையே விரும்பும்
வருமானம் அதில் தானே சிறக்கும்
மகளே நீ இங்கு வாழ்வது கடினம்
என்று சொல்லிப் போனதாம் காற்று...

## அதிகார வர்க்கத்தின் அடிப்படை கடமை

அமைதியற்று நாட்டையும்
இணக்கமற்று சமூகத்தையும்
ஒன்றுபடாது மக்களையும்
வென்று விடாத
ஒற்றுமையையும்
தொன்று தொட்டு காத்து வரும்
அதை அரசியல் ஆற்றலென்று சொல்லிவிடும்
இராஜதந்திரம் என்றும் மெச்சிக்கொள்ளும்
அதிகார வாடையின் பொதுவான நாற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா நீ எதிர்காலத்துக்காக வாழ்ந்திருந்தால்

காடு அழிந்து
மாரி பொய்க்காது
மாடி உயர்ந்து
வயல்கள் மாடியாகாது
விளைச்சல் குறைந்து
வறுமை தொடராது
நீ எதிர்காலத்துக்காக வாழ்ந்திருந்தால்

விசம் தெளித்து
நோய்கள் பரவாது
செயற்கை சேர்த்து
நிலம் உவர்க்காது
உணவிலும் நஞ்சிருக்காது
நீ எதிர்காலத்துக்காக வாழ்ந்திருந்தால்

பணம் இருக்கின்றது
குணமாகா நோயும்மிருக்கின்றது
செல்வம் தேடிய வழியில்
மகிழ்ச்சி மறைந்திருக்காது
நீ எதிர்காலத்துக்காக வாழ்ந்திருந்தால்

மதுச்சாலை வீதியில் தெரியாது
புகைப்பதில் உடலும் கருகாது
விபத்தில் உயிரும் போகாது
வீட்டில் பெண்மை முடங்காது
நீ எதிர்காலத்துக்காக வாழ்ந்திருந்தால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்று மொழியில் அர்ச்சனை எதற்கு

என் மொழிக்கு என்னதீட்டு
இன்னும் இருக்கிறாய் அடிமைப்பட்டு
உனக்கு வேண்டும் தமிழ்ப்பற்று
அறிவு கொண்டு புறப்பட்டு
ஆளட்டும் தமிழ் இன்று

மொழிக்காக கல்லறை போன குடி
கருவறை போக என்ன வழி
மலர வேண்டும் புது விதி
இனி எல்லாம் தமிழ் விதிப்படி

செம்மொழி எம்மொழி
கேட்கட்டும் இறையின் செவிவழி
தேவாரம் ஒன்றே மந்திர ஒலி

ஆகமம் அழிந்து ஆன்மீகம் மலரும்
ஆலயம் எங்கும் தமிழே ஒலிக்கும்
ஆதிச் சித்தன் சிவனின் விருப்பம்
அழியாது தமிழ் ஒரு நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டு உலகமடா

உயிருக்கு விலைபேசி
மருத்துவத் திருட்டு
உணவுக்கு விலைபேசும்
கலப்படத் திருட்டு
பெண்ணியம் பேசும் பொருட்டு
நிறக்கழிம்பு வியாபாரத் திருட்டு
மதுவுக்கும் புகைக்கும்
ஆண்மை அடிமைப்பட்டு
ஆடம்பரத்திருட்டு
பீசாவும் சிக்கனும் உணவாச்சு
கிராமத்து கடையெல்லாம் மூடியாச்சு
கோலாவுக்கு நாக்கு அடிமையாச்சு
அரச கொள்கைகளும் மாறியாச்சு
நாடே வியாபாரிக்கு அடைவாய் போச்சு

தனித்துவம் இழக்க
அடையாளம் அழியும்
அடையாளம் அழிய
அடிமைநிலை தொடரும்

வருவது வரட்டும் போராடு
வானம் அதிர வாதாடு
என்றும் நில் ஒன்றுபட்டு
அமைதியாகும் நாடு
அதன் பின்னே இளைப்பாறு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி

குண்டுகள் அங்கம்
துளைத்த போதும்
குருதி பெருகி பாய்ந்த போதும்
பசி வாட்டி பட்டினியால்
வயிறு ஒட்டிய போதும்
இதயத் துடிப்பு நின்று
மரணம் எட்டிப் பார்த்த போதும்
இருந்ததில்லை வலி...

இதயம் உரமாகி
இலக்கு ஒன்றாகி
விதியை வென்றாகி
நின்றது மனது
எல்லாம் கனவாகி
மண்ணோடு போனதும்...

மீண்டு வந்தோம்
இழந்த மானம்
இயம்ப மறந்தோம்
கையேந்தி நின்றோம்
கண்டவன் கற்பனைக்கு
கதையானோம்...

வலிக்கிறது
வலிக்கும் உள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரோடு வந்தோம்
என்று தவிக்கும் நெஞ்சம் அழுகிறது...

உழைக்கும் இடம்
ஊட்டிய வீரம்
நியாயமான எண்ணம்
நிலைக்கும் திண்ணம்
காட்டியவனைக் காணும்
கற்றதை மறக்கோம்
ஒரு நாளும்...

எம் நலம் தேடி
வீண் வாதம்
வேண்டாம் வலிக்கிறது
இதயம் துடித்து அழுகிறது...

## சாபமாக வீசுங்கள்

மன்னிக்கவும் மறக்கவும் செய்யாதீர்கள்
தொடர்ச்சியான மன்னிப்பும் மறதியும்
தொடரும் பிறழ்வுக்கு
அடிப்படையாக அமைந்து விடுகிறது
கவலையோடு கண்ணீரையும்
சாபமாக வீசுங்கள்
சமரசமற்ற அறத்தை
மனதுக்குள் விதையுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீயே வாழ்ந்து காட்டவேண்டும் இந்த நிகழ்காலத்தை

காதலில் காமத்தை கலந்து
குப்பைத் தொட்டியில் குழந்தை
குடும்பத்தில் காமத்தை மறந்து
நீதிமன்றத்தில் மணநீக்க பிரச்சனை

அன்பை மட்டும் விதையாதே
பண்பையும் சேர்த்து விதை
ஒருவனுக்கு ஒருத்தி இதுவே
எங்கள் மறை
ஒழுக்கத்தை மறந்ததால் நாடே
பிறழ்வு நிலை
மறுபடி ஒரு முறை
வாசித்துப்பார் வள்ளுவத்தை
திரும்பிப் பார்க்க வேண்டும்
உந்தன் வரலாற்றை
சந்ததிக்கு கொடுக்க வேண்டும்
நல்ல எதிர்காலத்தை
அறத்தில் அமைக்க வேண்டும்
அந்த அத்திவாரத்தை
நீயே வாழ்ந்து காட்டவேண்டும்
இந்த நிகழ்காலத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊருக்குள் பயணம்

தேசக்காற்று தேகத்தில் பட
புழுதி படிந்த சாலையில்
விழிகளை கசக்கிய படி
வீதியில் நடக்கிறேன்...
போரின் எச்சங்கள்
போர்த்தி மறைக்கப்பட்டு கிடக்கிறது
கறுத்த சாயம் பூசிய சாலைகளில்
மரித்த உடலங்கள் மூடப்பட்டு இருக்கிறது
தலையிழந்த பனைகளும் உக்கிப் போகின
கலையிழந்த தேசமே காட்சியாகின
வயல்களில் இயந்திரம் உழைத்தது
வறுமை கூலிகளை துரத்துகின்றது
தெருக்களில் இளசுகளின் ஆட்டம்
ஓரத்தில் மதுபான நாற்றம்
பக்கத்தில் வெற்றுமதுக்குளைகள் பூத்திருக்கும்
குளக்கரை தொடக்கம் கோயில் வரை
பள்ளி முதல் ஊர்கோடி வரை
மதுப் போத்தல்களே காட்சி
பசியில் அழும் குழந்தைகளே சாட்சி

வேலியில் நின்ற பாவட்டையில்லை
சாடியில் கற்பூர வள்ளியில்லை
முற்றத்து துளசியில்லை
முள்ளோடு தூதுவளையில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளோடு பதநீர் இல்லை
மண்ணோடு உரமும்மில்லை

ஊசியிலே பிறந்த கன்று
பூச்சி வயிரோடு நிற்குது
மாசியிலே அடிக்கும் வெய்யிலுக்கு
உயிரையெல்லோ விடுகுது
பார்த்தீர்களா மக்களே
ஊர் தானே சிறந்தது
உண்மையை மாட்டின் வாழ்க்கை சொல்லுது
இன்னும் என் பயணம் தொடருது.

## இனி எல்லையற்று விரியும்

காலநிலை மாறும்
கனமழையும் தூவும்
கதகதப்பு சேரும்
ஈரப்பதம் கூடும்
உள்ளோ வெதும்பும்
என் உறக்கம் தீரும்
உரு நிலையும் மாறும்
நிலம் மெல்ல பிளக்கும்
தலை மேலே நிமிரும்
என் பிறப்பு தொடங்கும்
இனி எல்லையற்று விரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படித்தான்

ஒற்றையடி பாதையில
ஓரமாய் நடக்கையில
ஓராயிரம் எண்ணத்தில
உலகத்த பார்க்கையில
பெத்தவ கைபிடிச்சு
ஒன்றாக போகையில
முற்றிய நெல்லிய
நுனிபல்லால் கடிக்கையில
வற்றிய வயிற்றில்
பழைய சோற்றை நிறப்பையில
அப்பனுக்கு சோறு அள்ள
அடிப்பான சத்திமிட
கம்மலுக்கு விடுமுறை வந்து
அடகுக்கடை போகையில
நாடழைத்த வேளையில
நடுச்சாம நேரத்தில
எல்லையில நிக்கையில
ஏர்பிடித்த கையால
எழுந்த முதற் கவிதை
உடம்பில குண்டுபட
உதிர்த்த முதல் வார்த்த
வரம்பில சாய்ந்திருந்து
வடித்த கண்ணீர் மழை
சிறைப்பட்டு போகையில
அழிக்கப்பட்ட நம்பிக்கையில
எழுந்த அந்த கவிக் குழந்த
எரித்து விட்ட நேரத்திலும்
பறக்கும் இந்த தனிப்பறவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நிகழ்ச்சியை எதிர்பார்க்கவில்லை

திரைக்கும் சிலைக்கும்
நடிக்கும் பணிக்கும்
கொடுக்கும் மதிப்பும்
இனத்தை கெடுக்கும்
படித்த படிப்பும்
நகைப்பில் முடியும்

கலைகளை கண்டபடி தின்று
கடைசியாய் வளர்ந்த பூதம்
காட்சிக்கு காட்சி கவர்ச்சியை காட்டும்
காதல் முறிவில் மதுவை தீண்டும்
காலத்தில் ஒன்றே கற்பூரமாய் மலரும்
கடைசியில் அது தோல்வியில் முடியும்

நடிப்பவனை தலைவன் என்று
ஊடகம் குடைபிடிக்கும்
நாசமாய் இளைஞர் படை பின்னால் திரியும்
தியாகிகள் போல சபையும் நடத்தும்
காலப்போக்கில் நாட்டையும் கொடுக்கும்.

பசியால் குழந்தை
பாலில் அபிசேகம்
பாழாய் போன படத்துக்கு
புரட்சி நடந்த மண்ணில்
இந்த நிகழ்ச்சியை எதிர்பார்க்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணம்மா கவனம் கண்ணம்மா

பாலைவனத்தில் வாழப் பழகிவிடு
பாவிகள் அதையே உருவாக்கிக்கொண்டு
இருக்கிறார்கள்

மூச்சை ஒரு குவளையில் சேர்த்து வை
காற்றையும் நஞ்சாக்கிக் கொண்டு இருக்கிறார்கள்

அடுத்த தேர்தலுக்கு இலஞ்சமாக
நீரையே வாங்கு
அதுவே விலையாக இருக்கும்

பணத்தை சேர்த்து வை அடுப்பு மூட்ட உதவும்
உலையில் நெல்லுக்கு பதிலாக
பூச்சிகளே கொதிக்கும்
ஏனெனில் அவைகளே
உலகில் மீதமாய் இருக்கும்

தொடர் நாடகத்தைப் பார்த்து
கண்ணீர் விடாதே
உலகில் இருக்கும் கடைசியான
நீராதாரம் அதுதான்.

வெள்ளத்தை உருவாக்கி அழிப்பார்கள் பின்
தரிசு நிலமென்று அபகரிப்பார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயலுக்கு கண்ணீர் வடிப்பார்கள்
அழிவில் இலாபம் காண்பார்கள்

உன் நிழல் தான் உனக்கு இளைப்பாற

கிடைக்கும் கடைசி இடம் அதையும் அழித்து விடாதே
கண்ணம்மா கவனம் கண்ணம்மா.

## போட்டி

ஏன்தான் போட்டி போடவேண்டும்
என்னோடு ஏன் போட்டிக்கு வரவேண்டும்
அகன்ற வெளி என் பாதை
யாரும் போட்டிக்கில்லை
யாருக்கும் போட்டியாகவுமில்லை
வெற்றி தோல்வி என்பதுமில்லை
எல்லாம் என் பயணத்தின் தன்மை

எந்த அளவுகோலும் திறமையை
அளக்க இதுவரையில்லை
இந்த உலக அளவுகோலில்
தவிர்க்கப்பட்டவர் எவரும்
திறமையில்லாமலில்லை
அளவுகோல்கள் வேறுபடாதவரை
போட்டியெனும் போலி!
தொடரும் என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்கு பின் நாங்கள் வளர்த்தது

நாட்டில் குப்பை
வீட்டில் தொல்லை
உடம்பில் தொப்பை

போர் முடிந்து நாங்கள் அள்ளியது
ஆற்றில் மணல்
வீதியில் உடல்
காட்டில் மரம்
வங்கியில் கடன்

போரோடு நாங்கள் விட்டு வந்தது
உதவும் மனசு
பக்கத்து வீட்டுக்கும் சேர்த்து சமைப்பது
எப்போதும் இனத்தை காப்பது
இயற்கையின் மேல் கொண்ட பற்று
என்றும் ஓயாமல் உழைப்பது
யாரையும் ஏமாற்றாமல் வாழ்ந்தது
பிறருக்காக அழுதது
எமக்காக எதையும் சேர்க்காதது
பணத்தை தேடி ஓடாதது
பெண்களை சீண்டாதது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையிலும் மகிழ்வை இழக்காதது
இளமையிலும் மதுவை நாடாதது

போருக்கு பின் நாங்கள் நடிப்பது

மதுக் கோப்பை ஏந்தி தேசியம் பேசுவது
மங்கையர் வீதியில் நடமாட அஞ்சுவது
ஏமாற்று உழைப்பிலே பணத்தை சேர்ப்பது
ஒருவனுக்கு ஒருத்தி நிலையை
இழந்தது
போதையில் வாழ்க்கை அழிந்தே போனது
தமிழன் என்று மார்தட்டிக் கொள்வது
நாய்க்கு வைக்கும் பெயரை
சேய்க்கு வைப்பது
இவையா தலைவன் எமக்கு
சொல்லிப் போனவை என்பது.

## உண்மை

உண்மை தான் எல்லோருக்கும்
பிடிக்கும் என்றால்
உலகில் கண்ணீரால்
தண்ணீருக்கு பஞ்சம் வராது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன என்ன நினைச்சிருப்ப

விடுவாங்கள் என்று நினைச்சியோ
விடுதலை நெருப்பு காக்க வருவான்
என நினைச்சியோ
பக்கத்தில் இருந்தவன் பாவம் பார்த்தது
இரக்கம் என நினைச்சியோ
இல்லை இறுதி என்று நினைச்சியோ
அடுத்த காப்பரணில்
கடைசியா கண்ட மச்சான்
ஒட்டிய வயிற்றோட
உட்குவிந்த கண்ணோட
அவனை ஒருநாளும் பார்த்ததில்லை
கடைசியா பார்க்கையில
எனக்காக ஒரு சொட்டு
கண்ணீரை வைச்சிருந்தான்
சண்டி வீரன் அவன்
காப்பாத்த வருவான் என்று
கடைசிவரை நினைச்சியோ

அக்காவின் கலியாணம் போகக் கூட
கிடைக்கவில்லை
புகைப்படத்தை பார்க்கலாம் என்று நினைச்சியோ
உன்னை இப்படி புகைப்படத்தில்
பார்ப்போம் என்று நினைச்சியோ

வெளிநாட்டு சொந்தங்கள்
நலம் கேட்கையில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியா பார்த்தவர்கள்
இருக்கிறாள் என்று சொல்லுவாங்கள்
என்று நினைச்சியோ

இனமானம் காத்த உன்னை
இப்படி மறந்து போகும் உலகம் என்று இதயத்தில
நினைச்சியோ
சாகக் கூட சயினைட் இல்லை
சாபம் என்று நினைச்சியோ

மனிதர்கள் தான் பிடித்தார்கள் என்று நினைச்சியோ
மிருகங்கள் வேட்டையில சிக்கினாய் என
நினைச்சியோ
இனம் உன்னை மறக்காது என மனதுக்குள்ள
நினைச்சியோ
கதியற்று போனதால கண்ணீர் விட நினைச்சியோ

வருங்காலம் பற்றி உன் ஆசைகளை நினைச்சியோ
எதிர்கால இனத்தின் நிலை பற்றி நினைச்சியோ
கரிகாலன் எங்கு என்று கண்ணீரும் விட்டாயோ
நரிக்கூட்டம் சுற்றி என்று கவலையும் கொண்டாயோ
கல்லாக இருந்த கடவுளை நினைச்சாயோ
கந்தகத்தோடு கலந்த கறுப்பு இறைகளை
நினைச்சாயோ.
ஐயோ உன்னை படத்தில் கண்டதும்
தமிழ் இனமே அழும் என்று நினைச்சாயோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யன்னலுக்கு வெளியே வாழ்க்கை

குருவியே வெளியே வா

ஒரே விம்பம் காட்டும் கண்ணாடி உடையட்டும்
நீ போட்ட முகமூடி கிழியட்டும்
உனக்குள் ஒருவன் புதிதாய் பிறக்கட்டும்
இறக்கை விரித்து வெளியே பறக்கட்டும்

அசையாத உதடுகள் அசையட்டும்
உலகறிய உண்மை கேட்கட்டும்
உன் கீதம் செவிகளைத் தீண்டட்டும்
எழும் கருத்து தீயை மூட்டட்டும்
ஆகாய மீதே பாதை போடு
மூடாத விழியால் இலக்கைத் தேடு
ஓயாத இறக்கையால் காற்றைக் கிழி
உனக்காக வாழ்வை நீயே எடு.

## வீட்டைப் பூட்டி

வீட்டைப் பூட்டி
கடவுளைக் காவலுக்கு வைத்துவிட்டு
கோயிலுக்கு போகிறோம் இறைவனைத் தேடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பளம்

மாதம் மாதம் வங்கிக்கு வரும்
வந்தவுடன் வளர்ந்து கிடந்த வட்டிக்கு
பாதி வெட்டுப்பட்டு மீதி இருக்கும்
ஏறிப்போகும் எரிபொருள் வற்றிப்போகும் மீதிப்பணம்
பதினைந்து தாண்ட முன்னே கடன்வேண்ட வரும்
பக்கத்து வீட்டு திருமணத்துக்கு
பத்தாயிரம் வேண்டும்
பக்தியாய் கோவில்போக பையில் கொஞ்சம் வேணும்
மிச்சமாய் இருந்தால் வைத்தியருக்கு போகும்
பலசரக்கு வாங்க போனேன்
பாதிதானே வாங்கி வந்தேன்
அதுக்கு கூட கடன் சொன்னேன்
மிச்சத்துக்கு எங்கே போவேன்
பால் மாவும் விலையாப்போச்சு
பசுப் பாலும் இல்லாமப்போச்சு
கடலுக்கு பக்கத்தில் ஊரு
கடன்வேண்டி மீன் வேண்டுகிறோம் பாரு.
சம்பளம் வந்தவுடன் பறந்து போகும்
அரசாங்க வேலை என்ற கௌரவம்
இருந்தால் தான் எட்டிவிடும் திருமணம்
இதுதான் படித்தவனின் முட்டாள்தனம்
சேமிக்க ஏதுமில்லை
சேமித்தது எதுவுமில்லை
எதிர்கால கவலை
எப்போது விடுதலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணுரிமை

பெண்ணுரிமை பேசுவார் மேடையில்
வன்கொடுமை செய்வார் வீட்டினில்
பாரதிபோல் கவிபடைப்பார் பாட்டினில்
இரவுகளை இனிமையாக்குவர் மதுப்போத்தலில்

ஆடைகளின் குறைகள் பற்றி பேசுவார்
ஆண்மையின் இலக்கணத்தை மாற்றுவார்

அஞ்சாமல் காமத்தை போற்றுவார்
அகிலத்தின் மீட்பராக ஓதுவார்

ஏந்துங்கள் தங்கைகளே கண்களில் தீ
காணுங்கள் உலகத்தை விழிகளில் நீ
விளங்குகங்கள் நாடகத்தை நடந்தவற்றின் மேல்
வாழுங்கள் சோதரிகளே தன்னம்பிக்கையினால்

பாடுங்கள் உங்களுக்கானவற்றை நீங்களே
எடுங்கள் உரிமைகளை தானாகவே
மாற்றுங்கள் மடையர்களின் மனங்களையே
அழியுங்கள் ஆதிக்கத்தின் வழிகளையே
ஆதரித்தால் ஆண்னென்று போற்றுங்களே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளை உலகத்தின் மேல் வைத்தது விழி

தொட்டில் சீலையின் துவாரத்தின் வழி
விரிசல்லடைந்த வீட்டுத்திட்ட சுவற்றைத் தாண்டி
பிள்ளை உலகத்தின் மேல் வைத்தது விழி
பார்ப்பது எல்லாம் குழந்தைக்கு சரி
அடுத்த தலைமுறைக்கு செய்த சதி

விருந்துக்கு மது அதுவே மதிப்பு
மருந்துக்கு நிற்பது அது தீர்ப்பு
பணத்தின் மேல் அதிக மதிப்பு
குணத்தின் தரம் இல்லாது ஒழிப்பு
குப்பையில் குழந்தைகள் நித்தம் மீட்பு
காம ஒழுக்கத்தின் நிலையில் பிறழ்வு
நித்தம் காணும் குழந்தைக்கு
இதுவே உலக இயல்பு

படிப்புக்காக கழிக்க கடனெடுக்க பழக்கி
கடன் அட்டை கலாசாரத்தில் சிக்கி
தங்கத்தை அடைவில் நித்தம் அடுக்கி
வட்டிக்கே உழைத்து பணத்தை அனுப்பி
இதுவே குழந்தைக்கு கெட்டிக்கார முறையாகிப்போனது
இதையே பழகிவிடப் போகுது
இதைத்தானா எதிர்காலத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் கொடுத்தது.
விசத்தை விசிறி விளைச்சல் அள்ளி
பணத்தை எடுத்து மருந்துக்கு அனுப்பி
உடலை நோயில் தினமும் கருக்கி
அதையே எதிர்காலத்துக்கு கடத்தி
உலகத்தை அழிக்கிறோம் விரும்பி
உற்றுப்பார்த்த பிள்ளை
கற்றுவிடப் போகிறது.

## அன்பைச் சிந்து

புன்னகைத்துக்கொண்டே இரு
காலம் உனக்காக வெளிச்சத்தை
தரக்காத்திருக்கிறது

சிந்தித்துக்கொண்டே இரு
சீக்கிரம் வழி திறக்கப்போகிறது

அன்பைச் சிந்து
மகிழ்ச்சி அலையாக
வரக்காத்திருக்கிறது

கற்பதை தொடர்
காலம் உனக்கான
கதவைத் திறந்து விடுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறுக்கி திரிகிறோம் நாடு சிறக்க

நச்சுப்புகை நாசவினை ஈழம் நடுங்க
இரத்தக்கறை தூசிப்படை எங்கும் பரவ
குண்டுமழை குடிசைவழி வெடித்துப் பொழிய
பேண்டு பிள்ளை கன்று பசு எல்லாம் சிதற
முள்ளிக்கரை தொடரும்கறை இன்றும் நடக்க

வானம் பொழிந்த கண்ணீர் நிலத்தை நிரப்ப
ஏகம் பிடித்த உலகு எம்மை அழிக்க
தாகம் தவித்த வேங்கை நிலத்தில் விதைய
கோலம் பூண்ட மாந்தர் உயிரை இழக்க
மீதிப் பிணங்கள் இங்கே அகதியாய் அலைய
காலம் தந்த கொடுமை தமிழன் மறக்க
மீண்டும் மதுவின் வினையில் ஈழம் அழிய
கிறுக்கி திரிகிறோம் நாடு சிறக்க

## புன்னகை

புன்னகையை முகக்கவசம் மறைத்ததால்
கண்கள் சிரிக்கப் பழகிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைபேசியே தள்ளிப்போ...

கண்கள் உன்னை உற்றுப் பார்க்கும்
விரல்கள் உந்தன் மேனி வருடும்
படுக்கை அறையில் பக்கம் இருப்பாய்
தலையணை அருகே சாய்ந்து சிரிப்பாய்
என்னைப் பிரியாது கையோடு வருவாய்
அப்பப்போ சிணுங்கி என்னை அழைப்பாய்

அரோகரா சத்தத்தில்
ஆண்டவனை மறைக்கிறாய்
யார் உன்னை தொட்டாலும்
நான் உன்னை எடுக்கிறேன்
வீணாக நேரத்தை
உன்னோடு தானே கழிக்கிறேன்
காலையில் கடவுளை மறந்து
உன் திரையிலே விழிக்கிறேன்

நான் சிரிக்க
எதாவது சிந்திக்க
சோகத்தில் அழ
எல்லாவற்றையும் நீயே முடிவு செய்கிறாய்
எப்போது என்னை விடுதலை காண வைப்பாய்

அன்புக் குழந்தையைத் தூக்க
ஆசை மனைவியை அணைக்க
அயலவரோடு ஆதரவாய் கதைக்க
நட்போடு கூடி விளையாட
விட்ட நேரத்தை விரட்ட
உணர்வுகளை வெளியே கொட்ட
இப்போதே தள்ளிப் போ கைபேசியே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழிசை

பறை கொண்டு முழங்கிய பண்பாடு
உடுக்கோடு ஆடிய பெரும் கூத்து
யாழ் மீட்டி பாடிய எம்பாட்டு
இனத்தின் தனிப்பெரும் வீரம் கண்டு
நாடே கொட்டியது முரசு அன்று

கொட்டு தண்ணுமை தமருகம் எங்கே
யாழ் வீணை குடமுழா பம்பை எங்கே
கண்டை தக்கை கொம்பு சங்கு எங்கே
திருச்சின்னம் துத்திரி தாரை சிறுபறை எங்கே
குழல் இடக்கை திமிலை கொக்கரை முரசு எங்கே
உடுக்கை பறை துடி சிலம்பு தாளம் எங்கே

எல்லாம் விட்டு சாதியை மட்டும் பற்றி
மதத்தை பிடித்து மரபை மறந்து
இனத்தை விடுத்து இருப்பை இழந்து
தமிழை துறந்து வாழ்தல் முறையன்று

தமிழிசை விடுத்து கர்நாடகம் எடுத்து
எமதென்று தொடுத்து புதுக்கதை விடுத்து
புலம்புதல் முறையோ
புறப்படு தமிழ் எங்கள் வழியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றம்

அப்பாவின் கையில் மிட்டாயை
காணாத போது ஏமாந்தேன்
எப்போதும் உணவுத் தட்டில் நிறையாத உணவு கண்டு
ஏமாந்தேன்
ஊத்தை போகாத கிழிந்த ஆடையை மாற்றாத
ஏமாற்றம்
ஏற்றம் காணாத பரீட்சை பெறுபேற்றின் ஏமாற்றம்
என்னை ஏற்றிப் பார்க்காத பள்ளி மேடையின்
ஏமாற்றம்
என்னோடு கூட மறுத்த நட்புகளின் ஏமாற்றம்

குடும்பத்தை விட்டுப்போன தந்தை தந்த ஏமாற்றம்
வறுமையே வாழ்க்கையான காலம் கொடுத்த ஏமாற்றம்
சுற்றி உறவிருந்தும் எட்டிப் பார்க்காத ஏமாற்றம்
திருவிழாவில் பொம்மை வாங்க முடியாமல் போன
ஏமாற்றம்
பெருவிழாவில் என்னை தவிர்த்த ஏமாற்றம்
என்னைக்கண்டு சட்டென திரும்பிய விழிகளால்
ஏமாற்றம்

பொருள் தேடி அலைந்த ஏமாற்றம்
புரட்சிக்கு விடை கிடைக்கா ஏமாற்றம்
இதுவரை என்னை தீண்டாத காதலின் ஏமாற்றம்
வாழ்க்கையில் நான் கண்ட போர்க்களே ஏமாற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடை

எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும்
மிதித்து அசையும் அடுத்த நகர்வும்
எடுத்த கால்களை பின்னே இழுக்கும்
தடக்கி விழுந்தால் முதுகில் மிதிக்கும்
பெருத்த கூட்டம் உன்னை நோக்கும்
மீறி எழுந்தால் முட்டி மோதும்

தடையை உடைத்து நெருப்பாய் எழும்பு
படையை தகர்த்து புயலாய் நொருக்கு
சோர்வை நீயே தூர விலக்கு
பார்வை கொண்டு பகையை அடக்கு
உன்னை நீயே உயர்வு படுத்து
உலகில் உனக்கு இடத்தை ஒதுக்கு

தட தட என வரும் தடை
கட கட என எட்டி உதை
விழ விழ எழும் நிலை
வர வர வளரும் நம்பிக்கை

ஏதும் உனக்கு தடையில்லை
இலக்கை மாற்றுதல் பிழையில்லை
விழுந்து கிடப்பது சரியில்லை
மனதை திறந்தால் கவலையில்லை
எழுந்து நடந்தால் தொலைவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைபேசி...

ஆறடி மனிதனும் அரையடிக்குள்
அடங்கிப்போன புதைகுழி
கண்ணடிக்கும் கையுக்கும் இடையே
இறுகிப்போன இடைவெளி
விழியருகே உலகத்தை தந்துபோகும்
மாயக் கண்ணாடி
நேரத்தை தன்பக்கம் இழுக்கும்
வாமன மாயாவி

பணத்தை கொடுத்தால்
எதையும் காட்டும் அலாவுதீன் பூதம்
விரலை தொட்டால்
வதந்தி பரப்பும் புதிய வேதம்
கண்டதையும் காட்டும் காமத்தையும் ஊட்டும்
ஆளற்ற விபச்சாரம்
கட்டணத்தை மட்டும் கண்டிப்பாய் வெட்டும்
கொள்ளை வியாபாரம்

எவனிடமும் கைபேசி உலக சமத்துவம்
எல்லாம் பேசி அழியுது கலாசாரம்
கையடக்க பேசியில் மட்டுமே பெண்ணியம்
நிஜத்தில் காணாமல் போகுது தேசியம்
இதுதான் இன்றைய நிலையாகும்

அவனையும் என்னையும் இணைக்கும்
காலம் பாராது ஏதேதோ கதைக்கும்
காதல் என்று புதுக்கதை விடுக்கும்
கைபேசி சட்டைபோல் அப்பப்போ மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்பார்ப்புகள்

எதிர்பார்ப்புகள் அதிகரிக்க
ஏமாற்றம் வந்துபோகும்
ஏக்கத்தில் மனமிருக்க
எப்படி வாழமுடியும்
என்னதான் செய்தாலும்
எப்படியோ ஆசைகள் தொடரும்

எது கிடைத்த போதிலும்
எதிர்பார்ப்பு முடியாமல் தொடரும்

ஆசையை துறக்க துறவியுமில்லை
ஆசையை அடைய இறைவனுமில்லை
ஆசையை வெல்ல புத்தனுமில்லை
ஆசையில் அடங்கிய மனிதனுமில்லை
ஆசையால் ஆசை என்னை விட்டதுமில்லை

கண்களை மூடிக் கனவுகள் கண்டேன்
கண்களைத் திறந்து உழைத்திட மறந்தேன்
திங்கள் தோறும் பெறுவதை அழித்தேன்
திரும்பத் திரும்ப அதையே செய்தேன்
வணிக வலையில் சிக்கிய புழுவாய் போனேன்
வந்ததை எல்லாம் வட்டிக்கு கொடுத்தேன்
வருமானம் இன்றி வருத்தத்தில் இருந்தேன்
விளங்கி எழுந்தேன் நான் மட்டும்
தனியே நின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளே...

உழுது களைச்சு நான்வர
உழுத்தங்களி நீ தர
உட்கார்ந்து நான் உண்ண
முதுகிலே நீ தொங்க
அண்ணாந்து நான் பார்த்து
ஒருவாய் நான் ஊட்ட
உழைத்ததெல்லாம் உனக்காக
உன்னப்பன் நானிருக்க
உனக்கென்ன கவலையிங்க

குமரியாக ஆனாலும்
தாயாகிப் போனாலும்
என் குழந்த நீ தானே
உன் அப்பன் நான்தானே
உழைச்சதெல்லாம் சீதனமாய்
நினைத்ததில்லை கொண்டுபோனதாய்

சீதனமாய் வந்தவள்
தெய்வமாய் கிடைத்தவள்
சீதனமாய் போகிறாள்
என்னைப் பிரிந்து செல்கிறாள்
என்பதுதான் என் கவலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீமைக்கு போனாலும்
தந்தையை நினைவில் வை
மீன் போல நானும்
அழுவதை காட்டியதில்லை
தேன் போன்ற அன்பினால்
எனக்கு பெருமை சேர்த்து வை
உரம்பெற்ற மார்பிலும்
ஈரத்தை மூடிவைத்தேன்
வரமாக உன்னைப் பெற்றாலும்
தானமாக கொடுத்து விட்டேன்
வளமாக வாழ வேண்டும்
என்று என் உழைப்பையே தந்துவிட்டேன்

என்றாலும் முடி நரைத்தாலும்
முதுமை அழைத்தாலும்
தன்னோடு இறை அழைக்கும் வரை
உனக்காக உழைக்கும் தந்தையின்
கரம் இருக்கும் வரை.

## இப்படிக்கு இயற்கை

நீங்கள் கைகளைக் கட்டிக்கொண்டால்
நான் தானாகவே ஆக்கிரமிப்பேன்
இப்படிக்கு இயற்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசமற்ற விவசாயம் வரவேண்டும்

காற்றோடு கதைபேசும் நிலப்பரப்பில்
ஊற்றாக வளைந்தோடும் நீர்ச்செழிப்பில்
பயிர்கள் முத்தமிடும் தென்றல் அணைப்பில்
குயில்கள் இசைமீட்டும் காதல் உணர்வில்
மருதம் உடமையான வயல்பரப்பில்
மயில்கள் நடனமாடும் வான்கறுப்பில்
உழவன் கால்மிதித்த சேற்றில்
உயிர்கள் பசி மறக்கும் விளைச்சலில்

மருது ஆற்றோரம் குடைபிடிக்கும்
மதியோ நீர் மீது முகம்பார்க்கும்
உழைப்பவன் வியர்வையை நிலமேற்கும்
வரம்புயர நாடே செழிப்பாகும்
இந்த தேசமே இனிவேண்டும்

விசமற்ற விவசாயம் வரவேண்டும்
விளக்கம் எம்மக்கள் பெறவேண்டும்
பணத்தின் விருப்பத்தை விடவேண்டும்
நோயற்ற தேசத்தை காணவேண்டும்
கவலைகள் மறந்து வாழவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை அகலும் வரை மாற்ற இயலாது

அச்சத்தில் நாம் வாழ நிச்சயம் செய்த உலகம்
பஞ்சத்தில் சிலர் சாக வழிசெய்த வியாபாரம்
பயத்தை பணமாக்கும் சூழ்ச்சியின் தத்துவம்
மருந்தே உணவான உண்மையின் உதாரணம்
சுழற்சி முறையில் அழிவு நடக்க வேண்டும்
அபிவிருத்தி என்று பொருட்கள் விற்கப்பட வேண்டும்
இதற்கான தந்திரங்கள் அதிகம் செய்ய வேண்டும்
மக்கள் துன்பத்தில் நித்தம் தவிக்க வேண்டும்
அகிலத்தில் வணிகம் இதையே விரும்பும்

புரிந்து கொண்டாலும் தவிர்க்க முடியாது
புலம்பித் தீர்த்தாலும் ஏதும் நடக்காது
ஆசை அகலும் வரை மாற்ற இயலாது
அன்பை விட பெரியது உலகில் இருக்காது
விளங்கி விட்டால் கவலை தீண்டாது

ஊரின் உற்பத்தியை உண்ணப் பழகு
நாட்டின் வளத்தை காக்க போராடு
பிள்ளைக்கு பணத்தை சேர்ப்பதை விடுத்து
நல்ல சூழலை அமைக்க தொடங்கு
நாட்டில் நிலவட்டும் அமைதி செழித்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாட்சியாய் பார்த்தது நீங்கள் தானே

வைகாசிக் காற்றே வளர்கின்ற நாற்றே
எம் துன்பம் கேளு உலகுக்கு கூறு
வானத்தில் ஓடும் முகிலே நித்திய ஒற்றனான நிலவே
எமது துயர் கண்டாய் சாட்சியாக நின்றாய்
செல் வெடித்த நேரம் கண்களை மூடாத நீங்கள்
பற்றிய கூரையின் வெளிச்சத்தில்
மிச்சமாய் மீட்ட உயிர்களை
சாட்சியாய் பார்த்தது நீங்கள் தானே

மூடிய பதுங்கு குழிக்குள் வேர் விட்ட மரமே
ஈழத்து உடல்களில் உரம் பெற்ற விருட்சமே
சிந்திய இரத்தத்தில் உருக்கொண்ட பயிரே
மாறாமல் இருந்துவிடு மறக்காமல் வளர்ந்துவிடு
கந்தக சிதறல்களை ஒழித்துக் கொண்ட மணல்
தரையே

காப்பாற்ற வந்தவரை அணைத்துக்கொண்ட
தாய் நிலமே
ஏமாற்றபட்ட இனத்தை ஏற்றுக் கொண்ட என் இடமே
எப்போது விடியும் என ஏங்கித் தவிக்கும் தேசமே
கனவுகளை சுமந்தவரை நீ சுமந்து கொண்டாயே
மீதியாய் நாம் இங்கு நடை பிணமாய்
அலைகின்றோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையக் கல்வி

பாடசாலையற்ற காலத்தில்
பயணத்தடை நேரத்தில்
நோயின் தாக்க கோரத்தில்
ஏழையின் கல்வி சோகத்தில்
நல்ல சட்டைக்கே வழியில்லை
சாப்பாட்டுக்கே நிவாரணத்தை எதிர்பார்க்கும் நிலை
தொழிலுக்கே போக முடியவில்லை
கைபேசியில் கல்விகற்கும் புதிய வித்தை

குழந்தையின் எதிர்காலம் பெருங்கவலை
பரீட்சையில் புத்தி அளவீடு
பணக்கார பிள்ளைக்கு மேலதிக வகுப்பு வேறு
இலவசக் கல்வியை வியாபாரமாக்கும்
தனியார் நிலையங்களின் விளம்பரத்தோடு
போட்டிப் பரீட்சையில் வெட்டுப்புள்ளியோடு
பள்ளிக்கூடங்களின் கதவுகள் மூடு
ஏழையின் கல்வி என்னவாகும் பாரு

பணத்தை கறக்கும் தொலைபேசி நிறுவனங்கள்
உழைப்பே நோக்கமான சில ஆசிரியத்
தொழிலாளர்கள்
நீண்டு செல்லும் நோயின் தாக்கங்கள்
மூடியே கிடக்கும் பாடசாலைக் கதவுகள்
ஏறிவரும் விலைவாசி மாறாத அரசியல் கொள்கைகள்
ஏழையின் கல்வி என்னவாகும் சொல்லுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிக்காத வரை மகிழ்ச்சி வாராது

எண்ணம் போல் வாழ்க்கை அமைகிறது
சிந்தனையில் நல்லவை சேர்வது நல்லது
சிரிக்காத வரை மகிழ்ச்சி வாராது
புன்னகை சிந்தும் இதயம் சோராது
பூக்களை விட மனங்கள் மென்மையானது
மனச்சாட்சியற்றவர் செயல்கள் மலர்களுக்கு
தீவைக்கிறது.

மாயக்காட்சிகள் மயங்கிக்கிடக்கும் உலகமிது
மனிதர்களை மதிப்பது மங்கி விட்டது
புனிதர்கள் வாழ்ந்த வையகமிது
புண்பட்டு நெஞ்சங்கள் வாழ்வது கொடியது
அன்பு என்னும் அறத்தை பேணுவது
மனித வாழ்வில் அவசியமானது
அகக் கண்ணாடியை நொருக்கிவிட்டு
முகம் பார்க்கக்கூடாது.

## முதுகில் குத்தாதீர்கள்

நீங்கள் யாரென்று அறிய பின்னே
கண்கள் இல்லை எனக்கு
முன்னே நின்று நெஞ்சில் குத்தும் போது
உங்கள் முகங்களை காட்டாதீர்கள்
துரோகியாக உங்களை பார்க்கும்
மன வலிமை இல்லை என் இதயத்துக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் தவறினால் அழிந்துபோவீர்கள்

விஞ்ஞானமென்று எதை மெச்சிக்கொள்வது
கண்ணுக்குத் தெரியாத கிருமியிடம்
தோற்றுப் போனதா

உழைத்துச் சேர்த்த பணத்தையெல்லாம்
உறிஞ்சிக் கொள்வதா

எதற்கும் அஞ்சாத சமூகத்தை
அடைத்து வைத்ததா

அரசியல் பித்தலாட்டத்துக்கு
களம் அமைப்பதா

பீதியில் மக்களின் பிணத்துக்கு
தீயிடுவதா

மூட நம்பிக்கை என்று சொல்லி
முட்டாளாக்கியதையா

தீண்டாமை அழித்தோமென்றிருக்க
மனித தீண்டாமையை பரிசளித்ததற்கா

கடவுள்களே கண்திறவுங்கள்
தவறுகள் நிறைந்த உலகை மன்னியுங்கள்
மனிதர்களே விழித்துக்கொள்ளுங்கள்
இனியும் தவறினால் அழிந்துபோவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு விருட்சம் அழுகிறது

தன்னிடம் வந்து போன பறவைக் கூட்டத்துக்காக
சுதந்திரமாய் கூடி வாழ்ந்த அந்தக் காலத்துக்காக
கூடுகள் சின்னதாக இருந்தாலும் மகிழ்ச்சி
பெருகியிருந்ததற்காக
வானுயர இருந்தாலும் பறந்தாலும்
நிலைத்திருந்ததற்காக
இன்னும் அதுபோன்ற விருட்சமென்று
துளிர்விடாததற்காக
ஓ அழுகிறது விருட்சம்

தானாக உருக்கொண்ட சுயம்பு அந்த விருட்சம்
வலிகளில் இருந்து வழிதேடப் புறப்பட்ட பயணம்
அறுக்கப்பட்ட கிளைகளும் உதிர்ந்து போன
பக்கங்களும்
உள்ளே தாக்கமும் உடலில் காயமும் அதிகம்
இருந்தாலும் சுதந்திர சுவாசத்துக்காக
வாழ்கிறது அந்த மரம்

எல்லோரும் தங்கள் தேவைகளுக்காக ஓடுகிறார்கள்
மரத்தைப் பற்றி பலர் சிந்திப்பதை
நிறுத்தி விட்டார்கள்
ஆனால் இருக்கும் கொஞ்ச சுதந்திரமும்
மரத்தாலே உருவாக்கப்பட்ட மறந்துவிட்டார்கள்
ஓ மரம் அழுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னச் சிறு தீவுக்குள்ள என்ன நடக்கு

இந்த சின்னச் சிறு தீவுக்குள்ள என்ன நடக்கு
கண்ணீரின் கதைகளே நூறு இருக்கு
மண்ணை நம்பி வாழும் எங்க மனித உழைப்பு
மண்ணுக்குள்ளே மாண்ட சோகம் நெஞ்சிலிருக்கு

பொன் விளையும் பூமிவிட்டு போவதெதற்கு
உயிராவதுமிஞ்சும் தானே என்ற நினைப்பு
இரத்ததாலே மூட்டிவிட்ட சுதந்தர நெருப்பு
சுற்றச் சுற்றி எப்பொழுதும் அடிமை விலங்கு
நாம் கற்றறிந்த பாடத்திலே ஏது இருக்கு
இங்கே கண்ணீரோடு அடிமைப்படச் சொல்லியிருக்கு

சுற்றும் இங்கே கரை தொட அலைகள் இருக்கு
வற்றிப்போக நீர்வளமும் நிறைந்து கிடக்கு
அடக்கு முறை ஒன்றுமட்டும் செழித்துக்கிடக்கு
உரிமையோடு வாழவிட்டால் போதும் எமக்கு
வளர்ச்சியோடு வசந்தம் வீசும் தேசம் நமக்கு.

எறிகணை தாக்கிய பனையில்
சுகமாகக் கூடியேறியது
மரங்கொத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதம் அழிந்து

மனிதம் அழிந்து மனிதம் அழிந்து
மிருகம் மட்டும் வளர்கிறதே
சமூகம் இன்று பணத்தின் பக்கம் செல்கிறதே
பொறுப்பை மறந்து பொறுப்பை மறந்து வேடிக்கை
மட்டும் பார்க்கிறதே

சிரிப்பை இழந்த எதிர்காலத்தை
பரிசாய் இங்கு விதைக்கிறதே
நெருப்பை கடந்த கூட்டம் இங்கு
குற்றச் சமூகமாய் மலர்கிறதே

வெறுப்பை மனதில் நித்தம் விதைத்து
ஏமாற்றி அலைகிறதே
அன்பை இங்கே வசதி வடிவில் தேடுகிறதே
ஆசை முடிந்தால் அழிவை நோக்கி ஓடுகிறதே

வஞ்சம் நிறைந்த மாந்தர் கூட்டம்
இழிவை இப்படி விரும்புகிறதே
மாற்றம் ஒன்றே மாறாத ஒன்று மாற்றம் தேடிச்
செல்வோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலி வேடமிட்டு பொய்யுரைக்க சாமி தரிசனம் எதற்கு..?

கற்களில் சிலை செதுக்கி
கடவுளென்று கனிந்துருகி
கண்மூடிக் கைகூப்பி
கல்லாக இதயத்தை மாற்றி
நீங்கள் போடும் வேடிக்கைக்கு
பெயர்தான் என்ன

உள்ளமே இறையென வாழும்
உண்மைப் பண்பே தமிழ் மறை
உங்களிடம் இரக்கமே இல்லை
இதற்கு இடையில் இது என்ன வேடிக்கை
போலி வேடமிட்டு பொய்யுரைக்க
சாமி தரிசனம் எதற்கு
காவி கறுப்பென நீங்கள் போடும்
நாடகம் வேறு அதற்கு

அன்பே சிவமென்ற பின்னே
மனங்களை சிதைத்து பிறகு
வழிபாட்டில் கிடைப்பதென்ன
உள்ளத்தில் இருளை நிரப்பி
தீபங்கள் ஏற்றி காணும் ஒளி
எந்த இருட்டைத் துரத்துமினி
கொஞ்சமாவது சிந்திக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் பயமிருந்தால்
நெஞ்சங்களை நிந்திக்காமல் வாழவேண்டும்
குற்றத்துக்கு மெல்ல அஞ்சவேண்டும்
அன்பை உலகில் விதைக்கவேண்டும்
கபடம் கலைக்கப்பட வேண்டும்
கருணை மலர வேண்டும்.

## இரணைமடு

நீ பொங்கி வந்தால் ஆனந்தம்
நீ நிறைந்து வழிந்தால் பேரானந்தம்
நீ என்றும் போற்றும் சமத்துவம்
நெல்லுக்கு வரும் போதே புல்லும் வளரும்
நீ வற்றிப் போனால் அஞ்சுவது மீன்கள் மட்டுமல்ல
நாங்களும் தான்

நீ துள்ளிப் பாயும் அழகைக் காண
ஆண்டுதோறும் மக்கள் கூட்டம்
நீ தானே நாம் வாழ ஆதாரம்
எத்தனை பட்டதாரி உருவாகினாலும்
நீ வந்து ஏர் ஓடினால்தான்
எங்கள் வயிறு நிறையும்
உழவுதானே உயிர்களின் ஆதாரம்
அதற்கே நீதானே மூலாதாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேரே ஆதாரமென்று

வாழவைத்த நன்றிக்காக வேர்களின்
கால்களில் விழுகிறது சருகுகள்
சருகுகளை அணைத்துக்கொண்டு
உரமாக்கி ஊட்டம் தருகிறது வேர்கள்

வெளியே தெரியாமலே உலகை அறியாமலே
கடமையை முடிக்கிறது அவைகள்
வேர்களுக்கு தெரியும்
வெளியே வந்தால் உலகம் உறங்கிவிடுமென்று

மரங்கள் அறியும்
வேரே ஆதாரமென்று
இதனால் ஒன்றையொன்று
குற்றம் காண்பதில்லை
அவைகளுக்கு புரியும் பிரச்சனை
வேறு இடத்தில் உதிப்பவையென்று

வெப்பமாக, காற்றாக, வெள்ளமாக, நோயாக மற்றும்
மனிதனாக என்று
முரண்கள் ஏற்படுவதில்லை வேறு
ஏன் தெரியுமா
அவை நகர்வதேதில்லை
மற்றவற்றை அறிந்துகொள்ள நினைப்பதுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைத்துப் பார்த்ததுண்டா...?

கடவுள் இருக்கோ இல்லையோ
ஏதோ ஒன்றுக்கு கட்டுப்பட்டுள்ளோமா
அறம் பிழைத்தால் அதற்காக
அஞ்சியிருக்கிறோமா
யாரிடமாவது யாருக்காகவும் கெஞ்சியிருக்கிறோமா
அன்புக்காக கெஞ்சியவருக்காக
இரங்கியிருக்கிறோமா

உணவற்ற ஏழைக்கு உதவியிருக்கிறோமா
பிழையெனத் தெரிந்தால் மறுத்திருக்கிறோமா
மன்னிக்கும் பக்குவத்தை வளர்த்திருக்கிறோமா
தவறுகளை எப்போதாவது ஏற்றுக்கொண்டுள்ளோமா
தனித்தனியே எமக்காக வாழ்ந்திருக்கிறோமா
ஏதாவது போட்டியில் வென்றிருக்கிறோமா
வென்றதை உளமாற மகிழ்ந்திருக்கிறோமா
தொடர்ந்து எதையாவது கற்றுக்கொண்டுள்ளோமா
மற்றவரை ஒருதரமாவது பாராட்டியுள்ளோமா
இயற்கை அழகை இரசித்துள்ளோமா
கண்களை பயணிக்க விட்டு கற்பனையில்
மிதந்திருக்கிறோமா

பணியில் முழுமையாக இணைந்திருக்கிறோமா
பயனற்ற செயலைத் தவிர்த்திருக்கிறோமா
மண்ணுக்குள் விதையை புதைத்திருக்கிறோமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைந்த பயிரைக் கண்டு மகிழ்ந்திருக்கிறோமா
தவறிய பின்னே உள்ளம் நடுங்கியிருக்கிறோமா
தவறை இதுவரை திருத்தியிருக்கிறோமா
தவறை தவறென்று உணர்ந்திருக்கிறோமா
இதற்காக நேரம் ஒதுக்கி சிந்தித்திருக்கிறோமா

மற்றவருக்கு துன்பம் கொடுத்ததற்காக
வருந்தியிருக்கிறோமா
கெட்டவர் என்று யாரையும் ஒதுக்கியிருக்கிறோமா
நல்லவர் என்று யாரிடமாவது நட்பாய்
இருந்திருக்கிறோமா
பணத்தை பாராமல் பழக
முயற்சித்திருக்கிறோமா
தரம் பாராமல் அன்பு செலுத்தியுள்ளோமா
இன்னும் ஆயிரம் கேள்விகள் உள்ளத்தில்
இவற்றுக்காக நேரம் ஒதுக்கியுள்ளோமா
என்பதே முதற் கேள்வி இதயத்தில்.

## சமூக நிலை

ஆறுமணி தாண்டியதும்
அழைப்பெடுக்கும் அம்மா
நேரம் கடந்து வீட்டுக்கு வந்தால்
கோபித்துக்கொள்ளும் மனையாள்
இல்லாது போன இல்லங்களால்
இன்றைய சமூகம் இன் நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி மனிதர்களைப் படியுங்கள்

புத்தகங்களை மடியுங்கள்
எல்லோரும் உயரத்தை நோக்கி ஓடுகிறோம்
எது எல்லை என்பதே தெரியாமல்
பிறக்கிறோம் படிக்கிறோம் உழைக்கிறோம்
மரிக்கிறோம் ஏன் வாழ்கிறோம்
என்றே புரியாமல்

வியர்வை சிந்தாமல் விளைச்சல் தேடும் காலம்
வினைத்திறன் என்று கல்வியே போதிக்கும்
படித்த திருடர்களை உருவாக்கும் கல்விமுறையும்
எதிர்காலத்தை இருட்டுக்கே இட்டுச்செல்லும்

பணம் தேவை தேடினால் ஆசை
தேவைக்கு மேல் பேராசை
குற்றத்தில் நிறையும் உலகை
வட்டிக்கு விட்டது பணமே
போலிக்குள் மறைந்த மனிதர்கள்
வேலிக்குள் நிற்காத மனங்கள்
வலிகளைத் தாங்கும் உள்ளங்கள்
ஏமாற்றமே எப்போதும் முடிவுகள்

நாடகத்தில் மட்டுமல்ல
வாழ்விலும் நடிகர்களே உள்ளார்கள்
வசதிக்கு மாறும் வேடங்கள் போடுகிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் அவர்கள் இரக்கம் இல்லாதவர்கள்
அதையே கற்று இங்கு வளர்ந்தவர்கள்
அவர்களே அனுபவிக்கும் போது புரிவார்கள்
இருந்தும் வெளியே தெரியாமல் நடிப்பார்கள்

இனி மனிதர்களைப் படியுங்கள்
புத்தகங்களை மடியுங்கள்
நாடுகளுக்கு இடையில் எல்லைகள்
தாண்டுவதற்கு பல சட்டங்கள்
ஓர் உலகமென்று ஓராயிரம் கருத்துக்கள்
உரிமை கேட்டுப் போராட்டங்கள்
யுத்தத்திலே நித்தம் சடலங்கள்
அதிகார அடக்குமுறை போட்டிகள்
அகதியாய் சில இனக்கூட்டங்கள்
இருந்தும் பலருக்கு வருவதில்லை கோபங்கள்
படித்த சிலரோ பலநேரம் மௌனங்கள்.

## நலம் தரும் நாவடக்கம்

வார்த்தைகள் உதிர்த்த நடுவே நடனமாடும்
கோபத்தில் குற்றம் காண வரம்புகள் மீறும்
ஆறடி மனிதனுக்கும் ஆபத்தாக அமையும்
பற்களின் பாதுகாப்பில் பக்குவமாக இருக்கும்
எல்லைகள் தாண்டினால் பற்களையே உடைக்கும்
நாவை அடக்கினால் நலமே காணும்
உறவுகள் உன்னைச் சுற்றிச் சேரும்
உடலில் சுகம் தானாக கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல்

இருப்பவர்கள் சிரிப்பார்கள்
இல்லாதவர்கள் ஏங்குவார்கள்
இழந்தவர்கள் போதிப்பார்கள்
இணைந்தவர்கள் மகிழ்வார்கள்
நினைத்தவர்கள் தவிப்பார்கள்
நீங்கியவர்கள் அழுவார்கள்

உடல் மயக்கம் நீங்கினாலும்
உள்ளத்தில் உறைந்து கிடப்பதே உண்மைக் காதல்
சொன்னவர்கள் காத்திருப்பார்கள்
வென்றவர்கள் கொண்டாடுவார்கள்
ஏமாற்றியவர்கள் வாழ்வார்கள்
மனதுக்குள் மரிப்பார்கள்
ஏமாந்தவர்கள் ஏங்குவார்கள்
தண்டனையை ஏற்பார்கள்

காதல் இருமனம் இணையும்
திருமணப் பாதை
தற்போது வசதயைத் தேடும் தரகு வேலை
இங்கு பிரிவுகள் என்பது சாதாரண நிலை
இதனால் கவலை கொள்ளத் தேவையில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்கர்

தமிழன் வாழ்வின் நித்திய தரிசனம்
கூவி வரும் எறிகணைக்கு பாதுகாப்புக் கவசம்
வான் வரும் விமான தாக்குதலின் மறைவிடம்
சிலகாலம் அதுவே எங்களின் வாழ்விடம்
தமிழன் சரித்திரம் எழுதப்பட்ட உறைவிடம்
உறங்கும் போதே உயிர்போன கொலைக்களம்
கருத்தரித்தது முதல் கரு வளர்ந்தது வரையும்
உரு பெற்று உயிர்வந்தது தொடக்கம்
உயிர் மடியும் பொழுதும்
பங்கரே வாழ்விடம்

பள்ளிக் காலத்து பங்கர் பல கதைகள் பேசும்
துள்ளித் திரிந்த மழலைகளின் உயிர் குடித்த கோரம்
அள்ளிப் போட்ட இதயம் துடிதுடித்த நேரம்
போட்ட அந்த சாபம் ஒருநாள் நீதி வழங்கும்

நெற்றியிலே முட்டும் பங்கர் நிலைக் குற்றி
மழையிலே நீர் நிரம்பும் பங்கரினை சுற்றி
போர்க்களத்தில் உயிர் காத்த பங்கரினை எண்ணி
தோலிலே சுமந்து வந்த பனைமரத்தின் குற்றி
தனிமையிலே தோழனாக உடனிருக்க சக்தி
என்னைக் காக்க தன்னை கொடுத்த
படப்பொருளைப் பற்றி
ஒற்ற வரி சொல்ல வேண்டும் கவிநடையை ஒட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனிருந்த நண்பனுக்கு கல்லறையான போதும்
உண்டு நாம் உறங்க மீண்டும் தோண்ட வேணும்
குடலறுந்து துடித்த பிள்ளை பிணக்குவியலோடும்
உடனிருந்து அழுத தாய்க்கு என்ன கூறமுடியும்

குப்பி விளக்கோடு பங்கர் புகும் நேரம்
குட்டிப் பாம்பொன்று குறுக்காலே ஓடும்
கெட்டிக்காரத் தம்பி தட்டி அடித்த போதும்
எட்டி வெளியில் போட விழுந்த அந்தக் குண்டும்
அவன் மார்பில் பாய்ந்து குருதி குடித்த கணம்
நெஞ்சு வெடித்து வான் அதிர கத்திய ஓலம்
மார்பில் சுமந்த தம்பி மண்ணில்
மரணித்த நினைவும்
அவன் செல்லமாய் கடித்த காயம் மட்டுமே
நினைவாய் தொடரும்

முள்ளிவாய்க்காலில் கூடாரம் அமைக்க முன்னமே
முதலில் அமைத்த ஆதாரம் பங்கர்
தண்ணி வந்து நிறைத்து நின்றாலும் உள்ளே
உறங்கும் நிலை தந்த பங்கர்
அள்ளிப் போட்டு எம் உறவுகளின்
இறுதி உறக்கம் தந்த பங்கர்
சோற்றுக் கோப்பை கொண்டு
தோண்டி அமைத்த பங்கர்
சொர்க்கவாசலாக இறுதிக்கிரிகை செய்த பங்கர்
வெட்ட வெளி மணல் பரப்பில்
மீதி உயிர் காத்த பங்கர்
தோண்டத் தோண்ட பல அனுபவம் தரும் பங்கர்
தொடரும் உண்மைகளோடு பங்கர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

எப்போதும் புதுமை தரும் முதுமை
என்றும் இனிக்கும் தனிப்பெரும் இளமை
கடல் கொண்டு போனாலும் அழியாத வலிமை
கன்னித் தமிழே ஆளும் உலகை

இறையனார் அருளிய இனிய மொழியே
உலகெல்லாம் ஒலிக்கும் தமிழின் ஒலியே
சங்கம் காத்த முடிவில்லா தமிழே
எங்கும் இருக்கும் நிகரில்லா அழகே
காதல் உன்மீது கொண்டேன்
கவிதை பெரும்பேறு பெற்றேன்
கனிந்து உன்னையே கவர்ந்தேன்
காற்றாக நின்னையே சுவாசித்தேன்

பேச்சாக என் மூச்சாக வந்தாய்
நான் பேசும் மொழியாக நின்றாய்
காற்றோடு காலமெல்லாம் கலந்தாய்
தாய்ப்பாலோடு தமிழாக சேர்ந்தாய்

கீழடியில் காத்திருக்கும் பெருமை
ஆதிச்ச நல்லூர் அதிசய அருமை
ஈழத்தை சுற்றிலும் இருக்கின்ற வலிமை
இனிய தமிழே நீ எங்களின் உடைமை
பல மொழி கற்பது காலத்தின் தேவை
தாய்மொழி மறப்பது நவீன மடமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கும் ஆற்றலை தருவது
தாய்மொழியின் வேலை
சிந்திப்பதை இழந்தால் என்றுமே அடிமைநிலை
தாய்மொழி ஒன்றே தனித்துவ நிலை
தயங்காத மகனே தமிழன் என்றே உரை

## உள்ளத்தைக் காட்டினால்

உருவத்தைக் காட்டும் கண்ணாடி
உள்ளத்தைக் காட்டினால்
உலகில் எவரும் கண்ணாடி முன் நிற்க
அச்சப்படுவார்கள்

வார்த்தையில் பொய் கலந்திருந்தால்
அழகு கெட்டுவிடுமென்றால்
இங்கு பேசுவதையே நிறுத்தி விடுவார்கள்

அன்பில் போலியிருந்தால்
ஆயுள் குறையுமென்றால்
காதலிப்பதையே மறந்துவிடுவார்கள்

நேர்மைதான் அழகென்றால்
மெய்யே ஆயுளென்றால்
உலகில் அமைதியாக வாழ்ந்து விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்பார்ப்பு

தருவான் இறைவன் என்று தொடங்கி
வருவான் தலைவன் என்பது வரை எதிர்பார்ப்பு

பிறந்த நிமிடத்தில் இருந்து
உயிர் இருக்கும் நொடிவரை
சுரக்கும் ஓமோன்களின் எதிர்பார்ப்பு

உயிர் வாழப் பசியென்று
வயிறு சொல்லும் செய்தி
அதுவும் ஒருவகை எதிர்பார்ப்பு
கண்ணீர் கல்லையும் கரைக்கும்
என கவலைகள் வடிக்கும்
விழிகளின் எதிர்பார்ப்பு

விழி மூடும் நேரத்தில் விடுதலை
கிடைக்காதா என்பதும்
விளங்க முடியாத வாழ்வின் எதிர்பார்ப்பு

ஏமாற்றத்தை ஏற்றுக்கொள்ளும்
இரும்பு மனங்களின் ஓரத்தில்
இருக்கும் நீர்ப் பிடிப்பில்
துருப்பிடித்த நினைவுகளின் எதிர்பார்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றும் துறந்த முனிவரும்
தேடும் தெய்வீகக் காதலும் எதிர்பார்ப்பு

கொடுக்கும் கொடையிலும்
இருக்கும் மகிழ்ச்சியும் ஒரு எதிர்பார்ப்பு

எதிலும் எவற்றிலும் ஏமாந்ததிலும்
ஏமாற்றியதிலும் இருப்பதும் இருந்ததும் எதிர்பார்ப்பு.

## வறுமையே உறுதி செய்கிறது

வசதியான வாழ்க்கையின்
அடித்தளத்தை
வறுமையே உறுதியாக
அமைக்கிறது
தெரிந்தோ தெரியாமலோ
அதுவே எதிர்காலத்தின்
அச்சாணி ஆகிவிடுகிறது
கடன் சுமையோடு இருப்பவனை
உள்ளம் உறங்க விடுவதில்லை
அதனால் உழைப்பும்
தேடலும் குறைந்ததில்லை
வரும் நிலைமை கண்டு
கலங்கத்தேவையில்லை
வாழ்க்கை என்பது
நம்பிக்கை என்னும்
சூட்சுமத்தின் உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா உன் சேலை

உன் சேலை பிடித்து
பயணம் தொடரும்
அம்மா உன் சேலை

ஆயுள் முழுதும் மனதில் இருக்கும்
கழுவிய கை துடைக்க
மழையில தலை துவட்ட
கவலையில் கண்ணீர் ஒற்ற
வெட்கத்தில் முகம் மூட
அம்மா உன் சேலை

இன்றைய அழகிகள் வாழ்ந்த
அன்பு நிறைந்த
அன்றைய அழகிய நிழற்குடை
அம்மா உன் சேலை

தன் மேனி கறுக்க
சேயின் சருமம் காக்க
முதல் அழகுப் பாதுகாப்பு கவசம் அம்மா உன் சேலை
நவீன அழகிகளின் அழகின் ஆதாரம்
அம்மா உன் சேலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளமை வறுமை

இளமையில் வறுமை போல
கொடுமை ஏதும் கிடையாது
இளகிய மனமிருந்தால்
துன்பம் தீர்ந்து போகாது

கண்ணீரில் மாலை கோர்த்து
போட்டவர் யாருமிருக்காது
உனக்குள்ளே இருக்கும் சோகம்
யாரும் உணரமுடியாது
நீயாக புரியும் போது
இங்கே ஏதுமிருக்காது

எளிமையாக யாரும் சொன்னால்
ஏற்றுமனம் கேட்காது
எதிர்பார்ப்பு தீரும் என்றால்
கடவுள் என்பதேயிருக்காது
உனக்கான நாளைத் தேடி
இப்போதே நடைபோடு

உன்னை விரும்பாத இடமிருந்தால்
விருப்பத்தோடு விலகிச் செல்லு
விடுமுறை என்பதே
முயற்சியாளனுக்குப் பிடிக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

சீனியும் தேவையில்லை
அங்கரும் தேவையில்லை
பனையும் பசுவும் இருக்கையிலே
கோதுமை தேடவில்லை
கொக்ககோலாவும் வேண்டவில்லை
அரிசியும் இளநீரும் இருக்கையிலே

பீசாவும் கேட்டதில்லை
பாட்சாவும் பார்த்ததில்லை
கூழும் கூத்தும் இருக்கையிலே
அப்பிளும் விருப்பமில்லை
ஒரேன்சும் ஒத்துவரவில்லை
ஆதி வாழையும் தோடையும்
கோடையில் கிடைக்கையிலே

ஆகமம் தேவையில்லை
நாஸ்திகம் தேடவில்லை
நடுகல் வழிபாடு இருக்கையிலே

வறுமையை ஏற்கவில்லை
வந்ததை ஏற்பதில்லை
தட்சார்பில் நாடே செழிக்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிசைகள் குடிப்பதில்லை
ஊசியும் ஊட்டமில்லை.
ஆயுர்வேத மருத்துவம்
ஆரோக்கியம் தருகையிலே

செவ்வாயில் நீருமில்லை
வீண் செலவுகள் தேவையில்லை
பசியோடு பலர் மடிகையிலே

சினிமாவில் ஆடைகள் நிறைவாகவில்லை
பெண்களுக்கு மதிப்பு கொடுப்பதுமில்லை
காமத்தில் காசு பார்க்கையிலே.

## ஏதும் திரும்பிக் கிடைக்காது

எங்கள் எலும்புகள்
மக்கி கனிமங்களாகலாம்
அதிலிருந்து எரிபொருள்
தாராளமா கிடைக்கலாம்
ஆனால் எங்களை ஏமாற்றிய
அரசியல் மனநிலை மாறாது
ஆதிக்க மதவாதம் மறையாது
அடுத்த தலைமுறையை வாழவிடாது
புரட்சியின் எழுச்சி நிகழாது
ஏதும் திரும்பிக் கிடைக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரண்கள் தான் முடிவற்றது

அணில் ஒன்று இருந்தது
மரங்களில் தாவியது
தன்னைப்போல் பழம் உண்ணும்
கிளியைக் கண்டது
நட்பாக இணைந்தது
காதலும் கொண்டது
சமூகம் முரண்பட்டது
இருந்தது இரண்டும் உடன்பட்டது

உலகை எதிர்த்து
திருமணம் நடந்தது
மரப்பொந்தில் வாழ்ந்த கிளி
தும்பு மெத்தையில் வசித்த அணில்
பறந்தே நாட்களை கழித்த ஒன்று
தாவியே வாழ்ந்து பழகிய ஒன்று
சேர்ந்து வாழத் தொடங்கியது இன்று

கிளிக்கு பாடவும் தெரியும் பேசவும் தெரியும்
அணிலுக்கு கீச் என்னும் சத்தமே புரியும்
இருந்தும் இரண்டும் வாழத் தொடங்கியது
காதல் இணைத்தாலும் வாழ்வியல் முரண்பட்டது
மனது உடன்பட்டதால் வாழ்வு புதுப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வாத ஒன்றை ஒன்று ஒருமித்தது
இதுதான் உள்ளத்தினை சிறப்பித்தது
அணில் ஒரு மாலை வாங்கியது கிளிக்காக
கிளி தன் கழுத்தில் ஏற்கனவே மாலை உள்ளதாக
அணிலுக்கே பரிசளித்தது உளமாற
ஒன்றுபட்டால் இடமுண்டு உலகாள
இடர்களை தாண்டி வாழ
உள்ளம் உடன்பட வேண்டும் மெல்ல

## கனவுகளை கலைத்து

கனவுகளை கலைத்து
நினைவுகளைப் பரிசாகத் தருகிறது
தோல்வி
வீழ்ந்த போதும்
எழுந்து நிற்கிறது
நம்பிக்கை
முடியாத நிலையில்
முடியும் என்கிறது
முயற்சி
போராடினால் தான்
கிடைத்து விடுகிறது
வெற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி கொரோனா

இப்படிக்கு குழந்தை
குடி நாற்றம் இல்ல அப்பாவின் வாயில் இருந்து
உண்மைப் பேச்சும்
அலங்காரம் இல்லாத அம்மாவின்
அழகான முகமும்
முகப்பூச்சுக்குள் முடங்கிய படி
முழுநாளும் மறைந்த அக்காவின்
எழில் வதனமும்
வெண் சுருட்டில் உதடு கறுத்து
மதுவில் கண் சிவந்து
மெல்ல இளமை இழந்த அண்ணாவின்
மெய் இளம் மிடுக்கும்
வீட்டுக்குள் எல்லோரும் அடைந்ததால்
ஒன்றாக பேசி மகிழ்ந்ததும்
போலிகள் மறந்து வேலிகள் இன்றி
அன்பை பயின்றதும்
நாடே அச்சத்தில் உறைந்து
உறவுகள் ஒன்றாக வீட்டில் சிறைப்பட்டதும்
நான் மகிழ்ச்சி பட்டதும் இன் நாளில் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை நான் அணைத்த போது

உன்னை நான் அணைத்த போது
உதிரத்தால் நனைத்திருக்கிறேன்
உன் மடியில் தலைசாய்த்த போது
உறக்கத்தில் மெய் மறந்திருக்கிறேன்
நித்தம் வியர்வை சிந்தி
உன்னோடு கலந்திருக்கிறேன்
உன்னை பிரியும் நேரம்
கண்ணீரில் குளித்திருக்கிறேன்
மீண்டும் உன்னடி வந்தபோது
மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறேன்
உனக்கு முத்தம் தர நான்
குளித்திருக்கிறேன்
உன்னையே நெற்றியில் குறியாக தரித்திருக்கிறேன்
உன்னோடு யாருக்கும் சொல்லாததை
எல்லாம் பேசியிருக்கிறேன்
உனக்கு மட்டுமே பலதை சொல்லியிருக்கிறேன்
உன்னை அடையாமல் தோற்றுப்போயிருக்கிறேன்
அதற்காக சிறையும் இருந்திருக்கிறேன்
எனக்காக பெற்றதெல்லாம்
உன்னிடத்தில் இருந்தே எடுத்திருக்கிறேன்
என் தாய்நிலமே தவிக்கிறேன்
உன் விடுதலை காணாமலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணம்

பிறந்தநாள்
நினைவு படுத்துகிறது
மரணம்

நரைமுடி
ஞாபகம் வருகிறது
நண்பனின் மரணம்

எல்லோருக்கும்
பொதுவுடமை
இலவசமாக மரணம்

பிறந்த போது
இதுவும் எழுதப்படுகிறது
மரணம்

பிடித்து வைக்க முடியாத
உயிர்க் காற்று
உடலைத் தாண்டினால் மரணம்

அழைப்பிதழ் தராமல்
அழைத்துச் செல்கிறது
மரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம் அடையாத
மனதுக்கு சுதந்திரம் தருகிறது மரணம்

மூச்சு உள்ளபோது
சேர்ந்தாலும் மூச்சடக்கி போனால்
மரணம் மட்டுமே

உடலை தீயில் எரிக்க
அனுமதி தருகின்றது
மரணம்

பூவில் உறங்கினாலும்
தீயில் இறக்கிவிடுகின்றது மரணம்

மறுத்தால் வராமல் போகாது
தடுத்தாலும் வரும் மரணம்

இறுதியில் வருகிறது மரணம்
இறைவனடி என்கிறது சமூகம்.

## புத்தகம்

உன்னை நான் தொடக் குனிகின்றேன்
உலகம் என்னைத் தேடத் தொடங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடினேன் அவளை

தேடினேன் அவளை
எப்போதும் எங்கும் அவளைத் தான் தேடினேன்
முப்போகம் விளைந்த நிலத்தில்
எப்போதும் அலைதரும் கடலில்
ஆழிதாண்டிய அன்னிய தேசத்தில்
நான் இல்லை அவள் இல்லாமல்

என் பேச்சுக் கூட மௌனத்தில்
அவளை நான் தேடினேன்
அவளுக்காகவே சுவாசிக்கின்றேன்
அவளையே வாசிக்கின்றேன்
அவளாலேயே வாழுகின்றேன்
பலரை தன் தடத்தில் பதித்துச் சென்றவள்
எனக்கும் அவளிடம் இடம்தரத் தேடுகின்றேன்

என் ஆசை அவள் மடிசேரவே
எனது கனவு அவளுக்காக வாழவே
என் சிரிப்பு என் அழுகை எல்லாம்
அவளிடம் அவளாலே கூறவே
அவளை நான் தேடினேன்

என்னுள் இருக்கிறாள் அவள்
நான் தேடத் தேட என்னுள் பெருகினாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வீழ்ந்த போது என்னைத் தாங்கினாள்
சிந்தித்த போது கவிதையாக தோன்றினாள்
அவளை நான் தேடினேன்

கிடைத்தாள் என்னவள் என்னுள்
இருக்கும் எப்போதும் எவருக்கும்
இளையவள் என் தமிழே அவள்

கனிந்த பழமொன்று
பால்கலந்த தேனில்
விழுந்து
தெளிந்த மணக்கும் நெய்யில்
மெல்லக் கலந்து
தீன் சுவைதரும் அமுதோடு
உருகிப் பிணைந்து
நாவில் எழும் ஓசையில் பட்டு
தாவி வரும் காற்றிலே சேர்ந்து
செவிகளை நாதமாய் சேரும்
இனிக்கும் தமிழே உன்னைத் தேடினேன்
நிறைந்து கிடக்கும் அமுதக்கடலை அடைந்தேன்
உண்டு முடித்தாலும் மீண்டும் மீண்டும்
பசியால் வாடினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராவணனின் பேரன்

இராமனுக்கு கோவில் கட்டிய
இராவண பரம்பரை நாங்கள்
பாட்டனார் பெயரை மறைத்து
தலையெழுத்தை மாற்றிய கூட்டம் நாங்கள்
வந்ததெல்லாம் ஏற்றுக் கொண்டு
வரலாற்றை அழித்த பாவிகள் நாங்கள்
தாய்மொழியில் கலப்படம் செய்த
மடையர்கள் நாங்கள்

அழிக்க வந்தவனை இறைவனாக்கி
காக்க நின்றவனை அரக்கனாக்கி
தேச பக்தி என வேடம் கட்டி
மாதத்துக்குள் மண்பற்று மறைத்த
மதவாத தியாகிகள் நாங்கள்

இருந்ததை அழித்து
இன்னொன்றை விரும்பி
இனத்தின் இருப்பை நொறுக்கி
இடத்தை தொலைத்து
அகதியாக அலையும் அனாதைகள் நாங்கள்

சரியான எதிரிகளை அடையாளம் காணத் தெரியாது
எமக்கான தலைவனை உருவாக்க இயலாது
மதுவை போதையை நாட்டை விட்டு துரத்தாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரோகம், துரோகி என எப்போதும் ஓதிக்கொண்டு
பணம் பதி என்று மாறி மாறி தாவிக்கொண்டு திரியும்
மந்திகள் நாங்கள்

மாறுவோம் மாற்றுவோம் வரலாற்றை பேணுவோம்
தமிழராக இணைவோம்
எம்மை நாமே ஆளுவோம்.

## சமூக மாயை

ஆண்கள் அழக்கூடாதென்னும்
சமூக மாயையில்
ஆண்களின் கண்ணீரை
இரவுகள் குடிக்கிறது

பெண்கள் சிரிக்க கூடாதென்னும்
சமூக மடமையில்
பெண்களின் புன்னகையை
மௌனம் தின்றுவிடுகிறது

பொருளாதாரப் பயத்தை விரட்டாமல்
மூட நம்பிக்கையை
விலக்க முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு நாள் பயணம்

வீதிகள் கறுப்பு உடையோடு எதிர்க்கிறது
சூரியன் வெப்பத்தால் மேனியை எரிக்கிறது
எப்போதும் முந்திச் செல்லும் உந்துருளி
இளைஞனின் கால்களுக்கு இடையே இருந்து
பறக்கிறது

ஆபத்துக்கள் அடிக்கடி சாதாரணமாகக் கடக்கிறது
கோயில்கள் சீமெந்து சுமைகளை நடக்கிறது
சில உயர்ந்த கட்டடங்கள்
குடிசைகளுக்கு நிழல் மட்டும் கொடுக்கிறது
செல்லப் பிராணிகள் வீதிகளில்
உடலங்களாக

வனங்களை அழகுப்படுத்தும் பறவைகள்
பசியற்ற வாகனங்களுக்கு இரையாக
பச்சைக் காடுகள் வற்றிப் போகின
மிச்சக் காடுகள் கருகி வாடின
இருப்பதைக் காக்க கற்கள் எழுந்தன
இருந்தும் அத்துமீறல் நடக்கின்றன

வயல்கள் மட்டுமே செழிப்போடு
மேய்ச்சற் தரவை வயலாக
அத்துமீறிய அபகரிப்பாக
ஆயுதம் தாங்கிய இருப்பாக
கால்நடைகள் எப்போதும்
ஒட்டிய வயிற்றோடு களைப்பாக
ஆயிரம் சோதனைகள் கடந்த வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்தில் பாதி நேரம்
கடந்தது சோதனைச் சாவடிகளை
ஆயுதங்கள் துருப்பிடிக்கவில்லை
மனதில் ஏறிய கறல்களால்
இன்னும் அதிகாரம் அடங்கவில்லை

பண்பாடும் அரிய வளங்களும்
பார்ப்பாரற்று ஒதுக்கப்பட்டு இருக்கிறது
பணமள்ளும் வங்கியும் கடனும் கட்டடமும்
நிறைந்து வழிகிறது

வலையில் சிக்காத மீன்கள்
வறுமையில் தவிக்கும் மீனவன்
தொழில்கள் அற்ற இளசுகள்
தரிசாய் தெரியும் காணிகள்

அழிந்து போகும் இனத்தின் அடையாளங்கள்
புதிதாய் புகுந்த பண்பாடுகள்
மதுவில் தள்ளாடும் குடும்பங்கள்
மனதை உருக்கும் காட்சிகள்

வீதியில் பானையில் குடிநீர் இல்லை
நிழலுக்கு ஒதுங்க நிழல் குடையில்லை
எப்போதும் பருகும் இளநீரில்லை
முப்போகம் விளையும் வாழையுமில்லை

தப்பாக போகிறது வாழ்வியல்
தடுத்து நிறுத்த வேண்டும் அரசியல்
எமக்கான தேடலே பொருளியல்
தட்சார்பு ஒன்றே தமிழர் வாழ்வியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோகக் கதை

எல்லாவற்றையும் இழந்து விட்டேன் என்பது
சோகக் கதை
இங்கே இழப்பதற்கு ஒன்றுமில்லை என்கிறதே கீதை

காற்றுக்கு வேலியில்லை ஒருகாலத்து தத்துவம்
இப்போது காற்றை அடைத்து வைக்க முடிகிறது
நவீன வித்துவம்

ஒரு காலத்தின் தவறுகள் தற்போதைய
புத்திசாலித் தனங்கள்
ஒரு காலத்தின் நோய்கள் இக்கால கலாசாரங்கள்
ஒரு காலத்தில் மறுக்கப்பட்டவை
தற்காலத் தத்துவங்கள்
ஒரு காலத்தில் கொண்டாடப்பட்டவை இப்போது
மூடநம்பிக்கைகள்

எல்லாம் மாறும் மீண்டும் புதிதாய் தோன்றும்
மனதை பலமாக்கு
இலக்கை பெரிதாக்கு
நம்பிக்கை உயர்வாக்கு
நாளை உன் வரலாறு

காயம் பட்ட இதயம் காவியத்தை படைக்கும்
காய்கள் உள்ள மரத்தில் தான்
காயங்கள் நிறைந்திருக்கும்
சேதப்பட இதயத்தில் ஒன்றுமில்லை
சேர்த்துவைக்க நெஞ்சம் குப்பைதொட்டியில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றவைத்த நெருப்பு எரியப் போவது உண்மை
ஆக்குமா, அழிக்குமா தெரிவு செய்வது உன்கை

மனதும் நிலமும் ஒன்று
காயப்பட்ட நிலமே விளைச்சல் தரும்
காயம் இல்லாது மனது எப்படி
உரம் பெறும்
வலிகளை வரிகளாக்கு கவிதைவரும்
அழுவதை விடுத்து தொழுதுபார்
ஆன்மீகம் பிறக்கும்
அமைதியை துறந்து
சிரித்துப் பழகு
உன்னைச் சுற்றி கூட்டமிருக்கும்

சோகம் உனக்கு போதை தந்து
சிறையில் போடும்
ஞானம் பிறந்து எழுந்துவந்தால்
உலகம் உன்னைப் பாடும்

வாள்கள் தாக்கிய காயத்தைவிட
வார்த்தைகளே உலகில் அதிக
காயங்களை விதைத்தது
ஈட்டி முனைகள் தீண்டியதை விட
மௌனங்களே குத்தியது
அம்புகள் நெஞ்சைத் துளைத்ததை விட
ஏமாற்றங்களே இதயத்தை கிழித்தது
மனமே போர்களம்
உணர்வுகளே ஆயுதம்
போராடித் தான் வாழனும்
நீயாகத் தான் மீளனும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத்தின் இறுதி நாட்கள்

மெல்ல இருட்டு படரத் தொடங்கியது
நிலவு வருவதேயில்லை
கருமை சற்று அதிகமாகவே பயத்தை தருகிறது
மின்சாரம் கிடைப்பதேயில்லை
பறவைகள் சத்தம் அவலமாக கேட்டது
எதையும் பார்க்க முடிவதில்லை
காற்று வீசுவது காணாமல் போய்விட்டது
சுவாசிக்கும் சத்தம் இரைச்சலாக இருக்கிறது

யாரும் பேசுவதேயில்லை
பேசுவதற்கு சக்தியில்லை
மனிதர்களும் விலங்குகளும்
மரங்கள் உதிர்த்த சருகுகளை
உண்டு பசி மறக்கின்றன
அந்த இருட்டில் காய்ந்த சருகுக்காக
மோதல் நடக்கிறது

தண்ணீர் தேவையான அளவு இருக்கிறது
உப்புத்தான் செறிவாக உள்ளது
யாரும் அலங்கரித்து கொள்வதில்லை
யாருக்கும் எதுவும் தெரியப்போவதும்மில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் வழிபாடுகள் இல்லை
மதக் கலவரமில்லை

உலகம் அமைதியாக சுற்றுகிறது
யாரும் யாருக்காகவும் அழுவதில்லை
அன்பு, காதல், ஏமாற்றம், கவலை எதுவுமேயில்லை
கதிரவன்வரும் திரும்பவும் கிழக்கு வெளிக்கும்
என்னும் எண்ணம் மறைந்து விட்டது
இருட்டில் வாழ ஒரு கூட்டம் பழகிவிட்டது
அதற்குள்ளும் தனக்கு என பலதை சேர்த்து வைத்தது.

## தலைவன்

இருப்பான் என்பது நம்பிக்கை
அவனே இருந்தான் இறுதி நம்பிக்கை
இங்கே வளர்த்தான் புரட்சியின் நெருப்பை
இருந்தாலும் இழந்தாலும் அடையும் இலக்கை
அவனைப் போல் வளருங்கள் உங்கள் மகவை
அவனின் வழி நடத்துங்கள் வாழ்வை
அவனாகவே தோன்றும் உங்கள் பிள்ளை
அதுவே அவன் சொல்லிப்போன உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்ட மரம்

பட்ட மரம் மண்ணில் நின்று
தான் பட்ட கதைசொல்லும்
வட்ட நிலா தேய்ந்து வளர்ந்து
வானில் வாழும் கதைபேசும்

நட்டநடு ஊரிலே உச்சிதொடும் கட்டடம்
சுற்றும் பூமி சற்று குலுங்கினால்
மண்ணுக்குள்ளே தலை சாய்ந்திடும்

முச்சறுந்த பட்டம்போல ஊருக்குள்ளே சுற்றுவோம்
மூச்சடங்கி போனால் மண்ணுக்குள்ளே துஞ்சுவோம்
வாழும் காலம் கொஞ்சம் தானே
இனிமையாகப் பேசுவோம்
வாழும்போது மன்னராக நமக்கு நாமே வாழுவோம்
மற்றவரின் துன்பம் கண்டு இரங்கினால் மனிதம்
அதர்மம் நீக்க களத்தில் இறங்கினால் புனிதம்

பொறுமை தானே வேதமென்று சொல்லித் தரும் மரம்
காலம் தானே மாற்றம் தரும் கண்கண்ட வேதம்
கடமை நீயும் செய்து விடு தானாக மாறும்
வார்த்தைகளும் மண்மீது போராட்டம் செய்யும்
தாகத்தோடு இருந்தால் தான் வாழுமாசை கூடும்.

*******************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர் பற்றி...



"வட்டக்கச்சி வினோத்" என்று, சமகாலக் கவிதைத் தடத்திலே ஈழப்புலத்தில் மட்டுமன்றி கடல் கடந்தும் பலராலும் அறியப்பட்டவர்.

சட்டஉதவி ஆணைக்குழுவில் பணி-புரியும் வினோத் அவர்கள், சீரிய சிந்தையும், நேரிய நடத்தையும், தன்னிகரில்லாத தன்னடக்கத்தையும் கொண்டவர் என்பதை தெரிந்தோர் அறிவர். சிறந்த கவியரங்கக் கவிசொல்லியாக உலா வருவதுடன் பல வெற்றிச் சான்றிதழ்களையும் பெற்றிருக் கிறார்.

சமூகப் பிரதிபலிப்பாக அமையும் இவரது கவிதைகளில் தன்னுணர்வுகளும் ஆழப்பதிந்திருக்கின்றன. அனுபவத்தின் பாற்கொண்ட கவிதைகள் என்றாலும் அடிப்படையில் ஏதோவொரு உண்மை வரிக்குவரி அமைந்திருப்பதையும் காணலாம். இவரது முதற்கவிதை நூலான "காலநதி" பெற் றிருந்த பெருவரவேற்பை "வேர்கள் வான் நோக்கின்" கவிநூலும் பெறும் எனும் பெரு நம்பிக்கை உண்டு. இதனை கவிப்பெரும் வாசகர்களே சாத்தியப்படுத்தக் கூடியவர் களாவார்கள்.

◆ சந்தக்கவிஞர் முல்லைத்தீபன் வே

ISBN 978-624-99411-0-6
9786249941106-1
Rs. 300/=
கலைமகள் அச்சகம், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org